Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 3

இதழ் 1-2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

16-23 ரபீவுஸ்ஸானி 1439 ஹிஜ்ரி கமரி 4-11 ஸுல்ஹ் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி
4-11 ஜனவரி 2018

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

---

**ஐரோப்பாவே! நீயும் பாதுகாப்பில் இல்லை. மேலும் ஆசியாவே! நீயும் பாதுகாக்கப்பட்டதாக இல்லை. தீவுகளில் வாழ்பவர்களே! எந்தவொரு செயற்கை இறைவனும் உங்களுக்கு உதவி செய்ய மாட்டான். நான், நகரங்கள் வீழ்வதைக் காண்கிறேன். மேலும், குடியிருப்புகள் நாசமாகி விட்டதைக் காண்கிறேன்.**

**இறைவன் கோபத்தை காட்டுவதில் நிதானமானவனாக இருக்கின்றான். உங்கள் மீது கருணை காட்டப்படும் பொருட்டு நீங்கள் பாவமன்னிப்புத் தேடுங்கள். எவர் இறைவனை விட்டு விடுகின்றாரோ அவர் ஒரு கிருமியாவார்; மனிதர் அல்ல. யார் அவனுக்கு அஞ்சுவதில்லையோ அவர் மரணித்தவராவார்; உயிருடன் இருப்பவர் அல்ல.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

**105 வது அடையாளம்:** ஒருமுறை எனது சகோதரர் மர்ஹூம் மிர்ஸா குலாம் காதிர் சாஹிப் அவர்களைப் பற்றி, அவர்களின் வாழ்விற்கு கொஞ்ச நாட்களே எஞ்சியுள்ளன. அது அதிகபட்சமாக 15 நாட்கள் ஆகும் என எனக்கு கனவில் காட்டப்பட்டது. பிறகு, அவர் ஒருமுறை கடும் நோயுற்றார். எதுவரையென்றால், வெறும் எலும்பு மட்டுமே எஞ்சியிருந்தது. எந்த அளவுக்கு அவர்கள் மெலிந்து விட்டார்கள் என்றால் கட்டிலில் அமர்ந்திருந்தாலும் ஒருவர் அதில் உட்கார்ந்திருக்கிறாரா ? அல்லது வெறும் கட்டில் இருக்கிறதா ? என்பது கூட தெரியாதிருந்தது. சிறுநீர், மலம் ஆகியவை கட்டிலிலேயே வெளியேறின. மேலும், மயக்க நிலை இருந்து வந்தது. எனவே, தந்தை மர்ஹூம் மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிப் அவர்கள் பெரிய திறமை வாய்ந்த மருத்துவராக இருந்தார்கள். அவர்கள், இப்போது இவருடைய இந்த நிலை கைவிடப்பட்டதும் நம்பிக்கையிழந்து விட்டதுமான நிலையாகும். சில நாட்கள்தான் எஞ்சி இருக்கின்றன என்று கூறி விட்டார்கள். அப்போது என்னிடம் இளமையின் ஆற்றல் இருந்தது. கடும் முயற்சியின் வலிமை இருந்தது. மேலும், எனது இயல்பு எப்படிப்பட்டதென்றால், இறைவன் எல்லாவற்றின் மீதும் ஆற்றல் மிக்கவன் ஆவான். உண்மையில் அவனுடைய ஆற்றல்களின் எல்லையைப் பற்றி யார் அறிய முடியும் ? அவனுடைய வாக்குறுதிக்கு எதிரானதும் அல்லது அவனது தூய மகத்துவத்திற்கு எதிரானதும் அவனுடைய ஓரிறைதன்மைக்கு எதிரானதுமான விஷயங்களைத் தவிர அவனுக்கு முன்னால் எதுவும் சாத்தியமற்றது என்றில்லை என்று நான் நம்புகிறேன். எனவே, நான் இந்த நிலையிலும் அவருக்காக துஆ செய்ய ஆரம்பித்து விட்டேன். மேலும், நான் இந்த துஆவில், மூன்று விஷயங்களில் எனது இறைஞானத்தை அதிகமாக்க விரும்புகிறேன் என என் உள்ளத்தில் உறுதி எடுத்துக் கொண்டேன். ஒன்று, கண்ணியத்திற்குரிய இறைவனின் முன்னால் எனது துஆ ஒப்புக் கொள்ளப்படும் அளவுக்கு நான் தகுதி உடையவன்தானா என நான் பார்க்க விரும்புகிறேன். இரண்டாவது, எச்சரிக்கைக்காக வரும் இல்ஹாம்கள், கனவுகளுக்கு காலதாமதமும் ஏற்படலாமா ? முடியாதா ? மூன்றாவது, ஒருவருடைய எலும்பு மட்டும எஞ்சியிருக்கின்ற இப்படிப்பட்ட நோயாளி துஆவின் மூலமாக சரியாக முடியுமா ? முடியாதா ? என்பதாகும்.

சுருக்கமாக, நான் இந்த அடிப்படையில் துஆ செய்ய ஆரம்பித்தேன். எனவே, எவன் கையில் என் உயிர் இருக்கின்றதோ அவன் மீது ஆணையாக! துஆவுடனேயே மாற்றம் ஏற்பட ஆரம்பித்து விட்டது. மேலும், இதற்கிடையில் நான் இன்னொரு கனவில் அவர்கள் அதாவது (மிர்ஸா குலாம் காதிர் சாஹிப்) தனது வராந்தாவில் தனது கால்களால் நடந்து கொண்டிருப்பதாகக் கண்டேன். ஆனால் அவரது நிலை எப்படி இருந்ததென்றால், அவரை இன்னொரு நபர்தான் திருப்பிப் படுக்க வைக்க வேண்டியதிருந்தது. துஆ செய்தவாறு 15 நாட்கள் சென்றதும் அவர்களிடம் உடல் நலத்தின் ஒரு வெளிப்படையான அடையாளம் உருவாகத் தொடங்கியது. நான் கொஞ்சம் அடி எடுத்து வைத்து நடக்க வேண்டும் என என் உள்ளம் விரும்புகிறது என்ற தமது ஆசையை அவர் வெளிப்படுத்தினார். எனவே, அவர்கள் ஓரளவுக்கு ஆதரவுடன் நடக்க ஆரம்பித்தார்கள். பிறகு கைத்தடியை எடுப்பதையும் விட்டு விட்டார்கள். சில நாள்களில் முழுமையாக உடல் நலம் பெற்று விட்டார்கள். அதற்குப் பிறகு அவர்கள் 15 ஆண்டுகள் உயிருடன் வாழ்ந்தார்கள். அதற்குப் பிறகே மரணித்தார்கள். அதிலிருந்து இறைவன் அவர்களது வாழ்நாளின் 15 நாட்களை 15 வருடங்களாக மாற்றி விட்டான் என்று தெரிய வருகின்றது. தனது முன்னறிவிப்புகளை மாற்றுவதற்கு கூட ஆற்றல் பெற்றிருக்கின்றவனே நமது இறைவனாவான். ஆனால், அவன் அதற்கு ஆற்றல் உடையவன் அல்ல எனறு நமது எதிரிகள் கூறுகின்றனர்.

**106 வது அடையாளம்:** எனக்கு ஒருமுறை உருவகமான ரீதியில் இறைவனுடன் சந்திப்பு ஏற்பட்டது. மேலும், நான் எனது கைகளால் பல முன்னறிவிப்புகளை எழுதினேன். அத்தகைய சம்பவங்கள் நடக்க வேண்டும் என்பதே அதன் பொருளாகும். அப்போது நான் அந்த தாள்களில் கையெழுத்திடுவதற்காக அவற்றை இறைவன் முன்னால் வைத்தேன். மேலும் இறைவன் எவ்வித தயக்கமும் காட்டாமல் சிவப்பு மை உள்ள பேனாவால் அவற்றில் கையெழுத்திட்டான். கையெழுத்திட்ட சமயத்தில் அதிகமாக மை இருந்தால் பேனாவை உதறுவதுபோன்று அவன் பேனாவை உதறினான். பிறகு அவற்றில் கையெழுத்திட்டான். எந்த அளவு இறைவனின் அருளும் கருணையும் என் மீது இருக்கின்றது. அதாவது, எவற்றையெல்லாம் நான் விரும்பினேனோ அவற்றின் மீது சிறிதும் தாமதிக்காமல் இறைவன் கையெழுத்திட்டுள்ளான் என்ற எண்ணத்தால் அந்த சமயத்தில் எனக்கு மிகவும் உருக்கமான நிலை ஏற்பட்டது. அதே சமயத்தில் எனது கண்கள்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது எண்ணற்ற எழுத்துக்கள், சொற்பொழிவுகள் மற்றும் சபைகளில் தனது வாதம் உண்மையானது என்பதற்கான சான்றுகளை வழங்கினார்கள். காலத்தின் தேவைக்கேற்ப வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகை மேலும் அன்னாருக்கு கிடைக்கும் இறை உதவிகள் போன்றவற்றை அன்னார் எடுத்துக் கூறினார்கள். அவை தூய உள்ளம் கொண்டவர்களுக்கு புரிந்து விட்டது. ஆனால் எவர்களின் உள்ளத்தில் காழ்ப்புணர்ச்சி இருந்ததோ, வெறுப்பு இருந்ததோ, சுயநலம் இருந்ததோ அவர்களுக்கு புரியவில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது வாதத்தின் உண்மைத்துவம் தொடர்பாக கூறியுள்ள பல்வேறு ஆதாரங்களையும் அடையாளங்களையும் பற்றி எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் மஸீஹிற்கும் முஹம்மதிய மஸீஹிற்கும் உள்ள ஒப்புமைகளை ஹுஸூர் அவர்கள் விளக்கமாகக் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களோடு ஒப்புமை இருக்கும் பட்சத்தில் இந்த நூற்றாண்டின் முஜத்தித் மஸீஹாக இருக்க வேண்டியது அவசியமானதாக இருந்தது. ஏனென்றால் மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குப் பிறகு 14 வது நூற்றாண்டில் வந்தார்கள். இப்போதும் 14 ஆம் நூற்றாண்டு ஆகும்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹை பொய்ப்படுத்துவது உண்மையில் அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களைப் பொய்ப்படுத்துவதாகும்.

அல்லாஹ் முஸ்லிம்களுக்கு அறிவை வழங்குவானாக. அவர்கள் மவ்லவிகளின் பேச்சில் விழாதிருப்பார்களாக. தங்களது அறிவை பயன்படுத்துவார்களாக. மேலும் கலப்பற்ற முறையில் இறைவனிடம் உதவியை நாடுபவர்களாக திகழ்வார்களாக. அல்லாஹ் அவர்களது உள்ளத்தை திறப்பானாக. மேலும் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு இன்றைய நாட்களில் முஸ்லிம் உலகம் சிக்கித் தவிக்கும் வித்தியாசமான இந்த நிலையிலிருந்து வெளியில் வருவார்களாக.

---

லப்பைக் யா ரஸூலல்லாஹ் என்று கூறக் கூடியவர்கள் உண்மையில் அஹ்மதிகளாகிய நாமே ஆவோம். அவர்கள் தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பேச்சைக் கேட்டு அதாவது எனது மஸீஹ், மஹ்தி வந்தால் அவரை ஏற்றுக் கொள்ளுங்கள். மேலும் அவருக்கு எனது ஸலாமை கூறுங்கள் என்ற கூற்றுக்கிணங்க லப்பைக் யா ரஸூலல்லாஹ் என்று உண்மையில் கூறுபவர்கள் ஆவர். இதுதான் லப்பைக் என்று கூறுவதற்கான சரியான வழியாகும்.

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**17 நவம்பர் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **17 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۔ إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِيْنُ ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۔

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஓர் கவிதையில் கூறுகின்றார்கள்: இது மஸீஹின் காலமாக இருந்தது. வேறு எவருடைய காலமாகவும் இருக்கவில்லை. நான் வராமல் இருந்திருந்தால் வேறு எவராவது வந்திருப்பார். (துர்ரே ஸமீன் உருது பக்கம் 160)

முஸ்லிம்கள் கடந்து சென்று கொண்டிருந்த அந்த காலம் வேதனையுடைய முஸ்லிம்களை மிகவும் நிம்மதியிழக்கச் செய்யக்கூடிய ஒரு காலமாக இருந்தது. இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் கிறித்தவர்களாக ஆகி விட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றிற்கிணங்க எப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருந்ததென்றால் ஈமான் கார்த்திகை நட்சத்திரம் வரை சென்றடைந்திருந்தது. செயல் அளவில் முஸ்லிம்களிடத்தில் மார்க்கமும் எஞ்சி இருக்கவில்லை. இஸ்லாத்தின் உண்மைத்துவம் எஞ்சியிருக்கவில்லை. இஸ்லாத்திற்காக வேதனை கொண்டவர்கள் ஏதேனும் மஸீஹ் வந்து தத்தளித்துக் கொண்டிருக்கின்ற இஸ்லாத்தின் கப்பலை காப்பாற்ற வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அதில் ஒரு சான்றோர் லூதியானாவைச் சார்ந்த ஹஸ்ரத் சூஃபி அஹ்மது ஜான் சாஹிப் அவர்களும் ஆவார்கள். தொலை தூரம் வரை அவர்களது புகழ் பரவி இருந்தது. அவர்களுக்கென்று ஏராளமான சீடர்கள் இருந்தனர். அவர்களின் உயர் அந்தஸ்த்தின் காரணமாக ஜம்முவின் மஹாராஜா நீங்கள் ஜம்மு வந்து எனக்காக துஆ செய்யுங்கள் என்று அன்னாரிடம் கேட்டுக் கொண்டார். ஆனால் அன்னார் நிராகரித்து விட்டார்கள். மேலும் துஆ செய்ய வேண்டுமென்றால் நீங்கள் என்னிடம் வாருங்கள் என்று கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும், பெரிய பெரிய மனிதர்கள் அவர்களின் சீடர்களாக இருந்தார்கள். ஆரம்பத்திலிருந்தே சூஃபி அஹ்மது ஜான் சாஹிப் அவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களோடு ஆழமான கொள்கை பிடிப்பு இருந்தது. ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அப்போது வாதம் செய்திருக்கவில்லை. மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதத்திற்கு முன்பே அன்னார் வஃபாத் ஆகி விட்டார்கள். அவர்கள் அந்த காலத்தின் நிலைமையக் கண்டு ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம், நோயாளியாகிய எங்களின் பார்வை உங்களின் மீதே இருக்கின்றது. இறைவனுக்காக நீங்கள் மஸீஹாவாக ஆகுங்கள் என்று கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும், நான் கூறியது போன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதத்திற்கு முன்பே அன்னார் வஃபாத்தாகி விட்டார்கள். ஆனால் அன்னார் தான் இக்காலத்தின் இமாமும், வாக்களிக்கப்பட்ட மஸீஹும் ஆவார்கள் என்ற நிச்சய உறுதி அவர்களுக்கு இருந்தது. எனவே தான் அவர்கள் தமது சந்ததிகளுக்கும், சீடர்களுக்கும் எப்போது வாதம் செய்யப்பட்டாலும் நீங்கள் அவரை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று அறிவுறுத்தி இருந்தார்கள். (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 11 பக்கம் 342-343. ஜுமுஆ குத்பா 23 மார்ச் 1928)

எவ்வாறிருப்பினும், நுட்பமான ஞானம் உடையவர்கள், சான்றோர்கள், இஸ்லாத்தினுடைய தத்தளித்துக் கொண்டிக்கும் கப்பலை இந்த காலத்தில் ஒருவரால் காப்பாற்ற முடியும் என்றால் அது ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களாலேயே முடியும் என்று அறிந்திருந்தனர். ஏனென்றால், அன்னார் பராஹீனே அஹ்மதிய்யாவை எழுதி இஸ்லாத்தின் எதிரிகளின் வாயை அடைத்தார்கள். அன்னாரது புத்தகங்கள், விவாதங்கள் போன்றவைகளுக்கு இஸ்லாத்தின் எதிரிகளால் பதிலளிக்க இயலவில்லை. அன்னார் வாதம் செய்யாத வரை பெரும் பெரும் ஆலிம்கள் அன்னாரின் கொள்கைகளை ஏற்று வந்தனர். ஆனால் அல்லாஹ்வினுடைய கட்டளையினால் அன்னார் வாதம் செய்த போது அதே ஆலிம்கள் தமது சுயநலன்களின் காரணமாக அன்னாரை எதிர்க்க ஆரம்பித்தனர். இன்று வரை அதே சுயநலம் கொண்ட ஆலிம்கள் தான் அன்னாரை எதிர்த்து வருகின்றனர். மேலும் முஸ்லிம்களின் உள்ளத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் அன்னாரது ஜமாஅத்திற்கு எதிராக வெறுப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது எண்ணற்ற எழுத்துக்கள், சொற்பொழிவுகள் மற்றும் சபைகளில் தனது வாதம்

உண்மையானது என்பதற்கான சான்றுகளை வழங்கினார்கள். காலத்தின் தேவைக்கேற்ப வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகை மேலும் அன்னாருக்கு கிடைக்கும் இறை உதவிகள் போன்றவற்றை அன்னார் எடுத்துக் கூறினார்கள். அவை தூய உள்ளம் கொண்டவர்களுக்கு புரிந்து விட்டது. ஆனால் எவர்களின் உள்ளத்தில் காழ்ப்புணர்ச்சி இருந்ததோ, வெறுப்பு இருந்ததோ, சுயநலம் இருந்ததோ அவர்களுக்கு புரியவில்லை.

இப்போது நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய சொற்களிலேயே சில விஷயங்களை எடுத்துக் கூறுவேன். இதை அன்னாரே கூறியுள்ளார்கள். இஸ்லாத்தில் பித்அத்கள் அதாவது மார்க்கத்தில் புதிதாக புகுத்தப்பட்டவைகள் நுழைந்து விட்டது என்பது தொடர்பாகவும், மார்க்கம் தனது அசல் வடிவில் இல்லை என்றும் ஆலிம்கள் தத்தமது விளக்கங்களை கொடுத்துள்ளார்கள் என்றும் மேலும் எண்ணற்ற பித்அத்துகள் முஸ்லிம்களிடம் உருவாகி விட்டது என்பது தொடர்பாகவும் மேலும் செயல் வடிவில் முஸ்லிம்கள் இஸ்லாத்தை விட்டு வெகு தூரம் சென்று விட்டார்கள் என்றும் பிற மார்க்கத்தைச் சார்ந்தவர்கள் குறிப்பாக கிறித்தவ பாதிரிமார்கள் திட்டங்களை தீட்டி இஸ்லாத்தின் மீது தாக்குதல் தொடுக்கின்றனர் என்றும் மேலும் இந்த நிலைமையை பற்றிய முன்னறிவிப்பை அல்லாஹ் மற்றும் அவனது தூதர் செய்திருந்தார்கள் என்றும் மேலும் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்கு ஒருவர் அனுப்பப்படுவார் என்பது தொடர்பாக அல்லாஹ் மற்றும் அவனது தூதர் முன்னறிவித்திருந்தார்கள் என்ற விஷயங்களைப் பற்றி எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இப்போது நமது வாதத்தை விட்டு விடுங்கள். அது ஒரு பக்கம் இருக்கட்டும். என்னைப் பொய்ப்படுத்தினீர்கள் என்றால் இஸ்லாத்தை கைநழுவ வேண்டியது வரும் என்பதை சிந்தித்து பதில் தாருங்கள். என்னை பொய்ப்படுத்துவீர்கள் என்றால் இஸ்லாத்தை விட்டும் தூரம் செல்வீர்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: நான் உண்மையாகவே கூறுகின்றேன். திருக்குர்ஆனின் வாக்குறுதிக்கு ஏற்ப அல்லாஹ் தனது மார்க்கத்தை பாதுகாத்தான். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்னறிவிப்பு நிறைவேறியது. ஏனென்றால் சரியான நேரத்தில் இறைவனுடைய வாக்குறுதிக்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நற்செய்திகளுக்கேற்ப இறைவன் இந்த ஜமாஅத்தை நிறுவினான். மேலும் சதகல்லாஹு வ ரஸுலுஹு அதாவது அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்களின் கூற்றுகள் உண்மை என்பது நிரூபணமாகி விட்டது. எவர் இதை நிராகரிக்கின்றாரோ அவர் அநீதியின் இயல்பை உடையவராவார். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 6-7; 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

அன்னார் 1903 ஆம் ஆண்டு இதை கூறினார்கள். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: நான் வாதம் செய்து 22 ஆண்டுகள் கடந்து விட்டன. அல்லாஹ்வின் உதவிகள் என்னோடு இருக்கின்றன. நான் பொய்யனாக இருந்தால் பிறகு இறைவன் புறமிருந்து எனக்கு ஏன் உதவிகள் கிடைக்கின்றன? (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 7; 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

இரண்டாவது, காலமும் எதிர்பார்க்கின்றது. மேலும் இந்த காலத்தில் மஸீஹ் வர வேண்டும் என்பதை அனைவரும் ஏற்றுக் கொண்டிருந்தனர். ஆக, தேவை இருக்கும் போது நான் இல்லையென்றால் பிறகு இன்னொருவரை முன்னிலைப்படுத்துங்கள். எவ்வாறிருப்பினும் முஸ்லிம்களின் சீர்திருத்தத்திற்கு ஒரு சீர்திருத்தவாதி வர வேண்டும். ஏனென்றால் இக்காலத்தில் குழப்பம் உச்ச நிலையை அடைந்துள்ளது. மேலும் முஸ்லிம்களிலும் குழப்பம் உச்ச நிலையில் உள்ளது. ஆக என்னை பொய்யர் என்று கூற வேண்டும் என்றால் அதற்கு இரண்டு நிலைகள் மட்டுமே உள்ளன. ஒன்று, வேறொரு சீர்திருத்தவாதியை காட்ட வேண்டும். ஏனென்றால், காலம் ஒரு சீர்திருத்தவாதியை எதிர்பார்க்கின்றது. அல்லது அல்லாஹ்வின் வாக்குறுதிகளை பொய்ப்படுத்த வேண்டும். அவனுடைய வாக்குறுதிகள் பொய்யானதாக இருந்தது என்று கூறுங்கள். ஏனென்றால், இதுபோன்ற சீர்கெட்ட நேரத்தில் ஒரு சீர்திருத்தவாதியை அனுப்புவேன் என்று அல்லாஹ் கூறி இருந்தான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: மார்க்கத்தை பாதுகாப்பது எந்நிலையிலும் அவசியமானதாகும். சிலர் மார்க்கத்தை பாதுகாக்க தேவையில்லை என்று கூறுகின்றனர். அவர்கள் பெரும் தவறிழைக்கின்றனர். உதாரணம் கூறுகின்றார்கள். பாருங்கள். ஒருவர் தோட்டம் போடுகின்றார். அல்லது கட்டடம் கட்டுகின்றார் என்றால் அதை எதிரிகளிடமிருந்து பாதுகாப்பது அவருக்கு கடமையில்லையா? அல்லது அவ்வாறு செய்வதை அவர் விரும்புவதில்லையா? தோட்டங்களை சுற்றி எப்படிப்பட்ட வேலிகள் பாதுகாப்பிற்காக போடப்படுகின்றன. மேலும் கட்டடங்களை நெருப்பின் தாக்கத்தில் இருந்து பாதுகாப்பதற்கு புதுப்புது கலவைகளை தயார் செய்கின்றனர். மேலும் இடியிலிருந்து காப்பாற்றுவதற்கு மின் கம்பிகள் பொருத்தப்படுகின்றன. இது மனிதனிடத்தில் பாதுகாப்பிற்காக இயல்பாகவே உள்ள ஒரு குணாதிசயத்தை வெளிப்படுத்துகின்றது. அவ்வாறிருக்க, அல்லாஹ் தனது மார்க்கத்தைப் பாதுகாப்பதற்காக அவ்வாறு செய்வது அவனுக்கு ஆகுமற்றதா? சந்தேகமின்றி அவன் பாதுகாக்கின்றான். அவன் ஒவ்வொரு கஷ்டமான நேரத்திலும் தனது மார்க்கத்தை பாதுகாத்தான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இப்போதும் அதன் தேவை ஏற்பட்டபோது அவன் என்னை அனுப்பினான். நிலைமைகளும் தேவைகளும் எதிர்பார்க்காமல் இருந்திருந்தால் ஒருவேளை இந்த பாதுகாத்தல் சந்தேகத்திற்குரியதாக இருந்திருக்கலாம். அல்லது நிராகரிக்க முடிந்திருக்கலாம். அவ்வாறு நிலைமை மோசமானதாக இல்லாமல் இருந்திருந்தால் காலத்தின் எதிர்பார்ப்பு இல்லாமல் இருந்திருந்தால் நான் தவறான நேரத்தில் வந்துள்ளேன் என்று உங்களால் கூற முடியும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஆனால் பல கோடிக்கணக்கான புத்தகங்கள் இஸ்லாத்திற்கு எதிராக வெளி வந்துள்ளன. மேலும் இவ்வாறு வெளி வந்துள்ள பிரசுரங்கள் இரு பக்க பத்திரிகைகள் எண்ணில் அடங்காதவையாகும். அவைகள் தினமும், வாரந்தோறும், மாதந் தோறும் பாதிரிமார்கள் தரப்பிலிருந்து வெளியிடப்படுகின்றன. அந்த ஏச்சுப் பேச்சுக்கள் ஒன்று சேர்க்கப்பட்டால் நமது நாட்டில் இஸ்லாத்தை விட்டு வெளியேறி கிறித்தவரானவர்கள் நமது எஜமானர் (ஸல்) அவர்களின் மீதும், மேலும் அன்னாரின் தூய மனைவிமார்கள் மீதும் எழுதியவைகளை ஒன்று சேர்த்தால் பல வீடுகள் நிரம்பி விடும். அவைகள் அனைத்தையும் ஒன்றாக ஒரே இடத்தில் வைத்தால் அவைகள் பல மைல் தூரம் வரை சென்று விடும்.

இமாதுத்தீன் என்று ஒரு நபர் இருந்தார். இவர் முஸ்லிமாவார். பின்னர் கிறித்தவ பாதிரியாக மாறி விட்டார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: இமாதுத்தீனுடைய எழுத்துக்கள் மிகவும் அபாயகரமானது என்று நீதியுடைய சில கிறித்தவர்களும் கூட ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். அதாவது, அவரின் எழுத்துக்கள் மிகவும் அபாயகரமானது என்று அவர்கள் கூட ஒப்புக் கொண்டுள்ளனர்.

லக்னோவிலிருந்து அந்த காலத்தில் ஷம்சுல் அஹ்பார் என்கின்ற ஒரு பத்திரிகை வெளி வந்து கொண்டிருந்தது. அதில் அவரின் சில புத்தகங்கள் பற்றி கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது. அதாவது இந்தியாவில் மீண்டும் போர் நடந்தால் இது போன்ற எழுத்துக்களால் தான் நடைபெறும். அதாவது இந்த பாதிரியார் எழுதிய எழுத்துக்களால் நடைபெறும் என்று அது கூறியிருந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: இப்படிப்பட்ட காலத்திலும் கூட இஸ்லாம் எங்கு சீர் குலைந்து போயிற்று? என்று இவர்கள் கேட்கின்றனர். இது போன்ற விஷயங்களை இஸ்லாத்திற்காக வேதனையற்றவர்களும் அல்லது இருட்டறையில் வளர்ந்து உலகை பற்றி அறியாதவர்களும்தான் கூற முடியும். ஆக, இப்படிப்பட்டவர்கள் இருக்கின்றார்கள் என்றால் அவர்களை பற்றி கவலையில்லை. ஆனால் எவர்கள் உள்ளத்தில் ஒளி உடையவர்களாக இருக்கின்றார்களோ, எவர்கள் இஸ்லாத்தின் மீது அன்பு மற்றும் தொடர்பு கொண்டவர்களக இருக்கின்றார்களோ, அல்லது காலத்தின் நிலைமையை அறிந்திருக்கின்றார்களோ அவர்கள் இக்காலம் ஒரு மாபெரும் சீர்திருத்தவாதியின் வருகையின் காலமாகும் என்பதை ஏற்றுக் கொள்வர். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 7-8; 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

பிறகு சீர்திருத்தவாதியின் வருகைக்கு சான்றுகளை காட்டியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு

வலுவான ஆதாரமாக கூறினார்கள்: ஒரு வலுவான சான்றை எடுத்து வைக்கின்றேன். அது சூரா அந்நூரிலுள்ள கிலாஃபத் பற்றிய வாக்குறுதியாகும். இதில் அல்லாஹ் வாக்குறுதி அளிக்கின்றான். அதாவது,

وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ
فِي الْاَرْضِ كَمَا اسْتَخْلَفَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கிலாஃபத் பற்றிய வாக்குறுதிக்கு ஏற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பின்னால் வரக்கூடிய கலீஃபாக்கள் முந்தைய கலீஃபாக்களை போன்று இருப்பார்கள். அதே போன்று திருக்குர்ஆனில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அல்லாஹ் மூஸா நபியோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளான். அல்லாஹ் கூறுகிறான்:

اِنَّاۤ اَرْسَلْنَاۤ اِلَيْكُمْ رَسُوْلًا شَاهِدًا عَلَيْكُمْ كَمَاۤ اَرْسَلْنَاۤ اِلٰى فِرْعَوْنَ رَسُوْلًا

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பைபிளின் முன்னறிவிப்பிற்கு ஏற்பவும், மூஸா (அலை) அவர்களோடு ஒப்புமை உடையவர்களாவார்கள். எனவே இந்த ஒப்பீட்டில் கமா என்கின்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல்தான், சூரா அந்நூரிலும் 'கமா' என்கின்ற அரபி சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதிலிருந்து தெளிவாகத் தெரிய வருவது என்னவென்றால், மூஸா (அலை) அவர்களின் தொடரிலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தொடரிலும் ஒரு முழுமையான ஒப்புமை உள்ளது. மூஸா (அலை) அவர்களின் தொடரில் கலீஃபாக்களின் தொடர் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களோடு முற்றுப் பெற்றது. அன்னார் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு 1400 வருடங்களுக்குப் பிறகு வந்தார்கள். இந்த ஒப்புமையின் அடிப்படையில் குறைந்தபட்சம் 14 ஆம் நூற்றாண்டில் அதே நிறமுடைய மற்றும் ஆற்றலுடைய ஒரு கலீஃபா இங்கும் வர வேண்டியதிருந்தது. அவரைப் போன்று ஒப்புமை கொண்டவராக இருக்க வேண்டியதிருந்தது. மேலும், அவரைப் போன்று அவரின் அடிச்சுவட்டில் இருக்க வேண்டியதிருந்தது.

ஆக, அல்லாஹ் இந்த விஷயத்திற்கு வேறு எந்த சாட்சியங்களை வழங்காமல் இருந்தாலும் கூட இந்த ஒப்புமை இயல்பாகவே எதிர்பார்த்தது என்னவென்றால், நிழல் வடிவிலான ஈஸா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தில் வர வேண்டியதிருந்தது. அவ்வாறு நடக்காமல் இருந்திருந்தால் அன்னாரைப் பற்றிய ஒப்புமை (அதாவது மூஸா (அலை) அவர்களோடு உள்ள ஒப்புமை) நவூதுபில்லாஹ் குறை உள்ளதாகவும், பலவீனமானதாகவும் நிரூபணமாகி இருக்கும். ஆனால், அல்லாஹ் அந்த ஒப்புமையை உறுதி செய்து அதற்கு உதவி செய்ததோடு மட்டுமின்றி மூஸாவை ஒத்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களை விடவும், அனைத்து நபிமார்களை விட சிறந்தவர்கள் ஆவார்கள் என்று நிரூபித்து விட்டான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் எந்தவொரு ஷரீஅத்தையும் கொண்டு வரவில்லை. மாறாக, தவ்ராத்தை பூர்த்தி செய்ய வந்தார்கள். அதே போன்று முஹம்மதிய்ய உம்மத்தின் மஸீஹும் தனக்கென்று எந்தவொரு ஷரீஅத்தையும் கொண்டு வரவில்லை. மாறாக, திருக்குர்ஆனுக்கு உயிரூட்டுவதற்காக வந்துள்ளார். மேலும் நேர்வழி முழுமையடைந்த பின்னர் அதை பரப்புவதற்காக வந்துள்ளார்.

பிறகு, நேர்வழி முழுமையடைந்த பின்னர் பரவுதல் தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நேர்வழி முழுமையடைந்த பின்னர் பரவுவது தொடர்பாக நினைவில் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது முழுமையடைந்த அருள்களுக்கும், முழுமை அடைந்த மார்க்கத்திற்கும் இரு நிலைகள் உள்ளது. முதலாவது, நேர்வழி முழுமையடைதல். இரண்டாவது, நேர்வழி முழுமையடைந்த பின்னர் பரவுதல். அதாவது, நேர்வழி முழுமையடைவதும், நேர்வழியைப் பரப்புதல் முழுமையடைதலும் ஆகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: நேர்வழி முழுமையடைதல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகையின் மூலம் நிறைவேறியது. மேலும் நேர்வழி முழுமையடைந்த பின்னர் பரவுதல் அன்னாரின் இரண்டாம் வருகையின் போது நிறைவேறியது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது காலத்தில் ஷரீஅத் இறங்கியது. நேர்வழி முழுமை அடைந்தது. மேலும் அன்னாரின் இரண்டாவது வருகை அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் அன்னாரின் உண்மை அடியாரின் காலத்தில் அது பரவ வேண்டியதிருந்தது. ஏனென்றால், சூரா ஜுமுஆவில் 'வ ஆகரீன மின்ஹும்' என்கின்ற வசனத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அருள் மற்றும் போதனையின் மூலம் இன்னொரு சமுதாயம் உருவாவது தொடர்பாக கூறப்பட்டிருப்பதிலிருந்து அன்னாரின் இன்னொரு வருகை இருக்கின்றது. மேலும், அந்த வருகை நிழல் வடிவிலானது என்பதும் தெளிவாக தெரிகின்றது. அது இப்போது நிகழந்து கொண்டிருக்கின்றது. இந்த காலம் நேர்வழி பரவுவதற்கான காலமாகும். இதன் காரணமாகத் தான் பரவுதலின் அனைத்து விஷயங்களும் முழுமையடைந்து கொண்டிருக்–கின்றது. அச்சகங்கள் அதிகமாகி விட்டன. ஒவ்வொரு நாளும் அதில் புதுப்புது விஷயங்கள் உருவாகின்றது. தபால் துறைகள், தந்திகள், ரயில்கள், ஆகாய விமானங்கள் ஆகியவற்றின் கண்டுபிடிப்பு மேலும் பத்திரிகைகளின் அச்சீடு ஆகிய இந்த அனைத்து விஷயங்களும் உலகை ஒரு நகரமாக்கி விட்டது. உலகம் ஒன்றாகி விட்டது.

இன்றைய காலத்திலோ இன்னும் ஒன்று சேர்ந்து விட்டது. சமூக வலைதளங்கள், இன்டர்நெட், தொலைக்காட்சி போன்றவைகளால் இன்னும் ஒன்றாகி விட்டது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: இந்த முன்னேற்றங்கள் உண்மையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்னேற்றங்களே ஆகும். ஏனென்றால் இதன் மூலம் அன்னாரின் நேர்வழி முழுமை அடைதல் என்பதின் இன்னொரு அம்சமான நேர்வழி முழுமையடைந்த பின்னர் பரவுதல் என்பது முழுமையடைந்து கொண்டிருக்கின்றது.

பிறகு மூஸாவின் மஸீஹ் மற்றும் முஹம்மதிய்ய மஸீஹ் இடையேயுள்ள ஒப்புமை பற்றி கூறினார்கள்: மூஸாவின் மஸீஹ் நான் தவ்ராத்தை பூர்த்தி செய்யவே வந்துள்ளேன் என்று கூறியதை போன்றதே ஆகும். மேலும் எனது இன்னொரு பணி, நேர்வழி முழுமையடைந்த பின்னர் பரப்புவதும் ஆகும். இது தவிர ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் காலத்தில் ஏற்பட்ட துயரங்கள் போன்றே இங்கும் காணப்படுகின்றது. அங்கு யூதர்களின் நிலைமை மிக மோசமானதாகி இருந்தது. அவர்கள் தவ்ராத்தின் கட்டளைகளை விட்டு விட்டார்கள். மேலும் அதற்கு பதிலாக தால்மூது மற்றும் சான்றோர்களின் அறிவிப்புகளுக்கு முக்கியத்தும் கொடுத்து வந்தார்கள் என்பதற்கு வரலாற்றில் இருந்து சான்று கிடைக்கின்றது. இப்போது முஸ்லிம்களிலும் அதே நிலைமை தான் ஏற்பட்டுள்ளது. இறை வேதம் கைவிடப்பட்டு விட்டது. அதற்கு பதிலாக அறிவிப்புகளுக்கும், கதைகளுக்கும் அழுத்தம் கொடுக்கப்படுகின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இவை அனைத்தையும் தவிர்த்தும் கூட இந்த ஒப்புமையை முழுமை செய்யக்கூடிய இன்னோர் இரகசியமும் உள்ளது. அது என்னவென்றால், ஹஸ்ரத் மஸீஹ் நல்லொழுக்க போதனைகளுக்கு அழுத்தம் கொடுத்தார்கள். மேலும் மூஸாவின் உம்மத்தில்

M. Abdul Raoof
✆ +91 9362 2272 29
SUCCESS INDIA
PROMOTERS
Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237
METAPLAST
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP
# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

Q4Q
Bamboo Village
MULTI CUISINE
RESTAURANT
Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com

நடந்து வந்த போர்களை சீர்திருத்த வந்தார்கள். அவர்கள் எந்த வாளையும் ஏந்தவில்லை. வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்கும் இதுவே விதிக்கப்பட்டிருந்தது. அவர் இஸ்லாத்தின் சிறப்புகளின் உண்மையான செயல் முன்மாதிரியை நிலைநாட்ட வேண்டியதிருந்தது. மேலும் இஸ்லாம் வாளால் பரவியது என்ற ஆட்சேபனையைக் களைய வேண்டியதிருந்தது. இந்த குற்றச்சாட்டு வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தில் முற்றிலும் களையப்பட இருந்தது. ஏனென்றால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அதற்கு எதிராகப் பேசுவார். மேலும், இஸ்லாம் அன்பு, நேசத்தின் போதனையை வழங்குகின்றது. அதன் மூலமே பரவியது என்பதை எடுத்துக் கூறுவார். ஏனென்றால், அவர் இஸ்லாத்தின் உயிருள்ள அருட்கள், உண்மையான அருட்கள் மூலம் அதன் உண்மையை உலகத்தில் நிலைநாட்டுவார். இன்று இந்த முன்னேற்றமடைந்த காலத்திலும் கூட எவ்வாறு இஸ்லாம் முழுக்க முழுக்க தனது தூய போதனைகள் மேலும் அதனுடைய அருட்கள் மற்றும் கனிகள் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும், பலன் தரக்கூடியதாகவும் இருக்கின்றதோ அதேபோன்று எல்லா காலத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும், பலனைத் தரக்கூடியதாகவும் இருந்தது என்பதை நிரூபிப்பார்.

இந்த காரணத்தினால் தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வரக்கூடிய மஸீஹை பற்றி முன்னறிவித்ததோடு அதில் யதவுல் ஹர்ப் அதாவது அவர் போரை நிறுத்துவார் என்று கூறினார்கள். இப்போது இந்த அனைத்து சாட்சியங்களையும் ஒன்று சேர்த்து பாருங்கள். வானத்திலிருந்து ஒரு ஆண் மகன் இறங்க வேண்டும் என்பது அவசியமானதாக இல்லையா? ஒவ்வொரு நூற்றாண்டிலும் முஜத்தித் வர வேண்டும். மேலும், இந்த நூற்றாண்டில் கண்டிப்பாக முஜத்தித் வர வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டிருக்கும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களோடு ஒப்புமை இருக்கும் பட்சத்தில் இந்த நூற்றாண்டின் முஜத்தித் மஸீஹாக இருக்க வேண்டியது அவசியமானதாக இருந்தது. ஏனென்றால் மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு பிறகு 14 வது நூற்றாண்டில் வந்தார்கள். இப்போதும் 14 ஆம் நூற்றாண்டு ஆகும். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 9-12; 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

பிறகு, நீங்கள் என்னை பொய்ப்படுத்து –கின்றீர்கள் என்றால் அது அல்லாஹ் மற்றும் அவனது தூதரை பொய்ப்படுத்துவதாகும் என்பது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: என்னை மறுப்பது உண்மையில் என்னை மறுப்பது அல்ல. மாறாக, அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களை மறுப்பதாகும். ஏனென்றால் எவர் என்னை பொய்ப்படுத்துகின்றாரோ அதன் மூலம் அவர் நவூதுபில்லாஹ் அல்லாஹ்வை பொய்ப் –படுத்துகின்றார். அக மற்றும் புற குழப்பங்கள் உச்சத்தை அடைந்திருப்பதை அவர் கண்ட பிறகும் கூட மேலும் அல்லாஹ், إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ என்ற வாக்குறுதிக்கேற்ப பாதுகாப்பிற்கான எந்த ஏற்பாட்டையும் செய்யவில்லை என்று கூறுகிறார். அதாவது அல்லாஹ் கிலாஃபத் பற்றிய வசனத்தில் மூஸாவினுடைய உம்மத்தைப் போன்று இந்த முஹம்மதிய்ய உம்மத்திலும் கலீஃபாக்களின் தொடரை ஏற்படுத்துவான் என்று வாக்குறுதி அளித்துள்ளான் என்ற கொள்கையை அவர் வெளிப்படையாக கொண்டவராக இருக்கின்றார். ஆனால் அல்லாஹ் அந்த வாக்குறுதியை பூர்த்தி செய்யவில்லை. மேலும் இப்போது எந்த கலீஃபாவும் வரவில்லை என்று கூறுவது எதுவரை எடுத்துச் செல்லும் என்றால் திருக்குர்ஆனில் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களோடு ஒப்பிட்டு கூறியது சரியல்ல என்ற கூற வேண்டியது வரும். அல்லாஹ் பாதுகாப்பானாக. எனவே முழுமையான ஒப்புமைக்கு மூஸாவின் உம்மத்தில் 14 ஆம் நூற்றாண்டில் ஒரு மஸீஹ் வந்ததைப் போன்று இந்த உம்மத்திலும் 14 ஆம் நூற்றாண்டில் ஒரு மஸீஹ் வரவேண்டியதிருந்தது.

பிறகு, அவ்வாறே وَآخَرِينَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوا بِهِمْ என்ற வசனத்தையும் மறுக்க வேண்டியது வரும். மேலும் அவ்வாறே திருக்குர்ஆனின் வேறு பல வசனங்களையும் பொய்ப்படுத்த வேண்டியது வரும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: மீண்டும் சிந்தியுங்கள். என்னை பொய்ப்படுத்துவது ஒரு சாதாரண விஷயமா? இதை நான் கூறவில்லை. மாறாக, இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். இதுவே உண்மையாகும். எவர் என்னை விட்டு விடுவாரோ, மேலும் என்னை பொய்ப்படுத்துவாரோ அவர் நாவினால் அவ்வாறு செய்யாவிட்டாலும் அவர் செயல் அளவில் முழு குர்ஆனையும் பொய்ப்படுத்தி விட்டவர் ஆவார். அவர் இறைவனை விட்டு விட்டவர் ஆவார்.

பிறகு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: என்னை பொய்ப்படுத்துவது என்பது உண்மையில் என்னைப் பொய்ப்படுத்துவதல்ல. மாறாக, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பொய்ப்படுத்துவ –தாகும். ஒருவர் என்னை பொய்ப்படுத்த துணிவதற்கு முன்பு தனது உள்ளத்தில் சற்று சிந்திக்கட்டும். மேலும் அவர் யாரை பொய்ப் –படுத்துகிறார் என்று அவரது உள்ளத்திடமே அவர் ஃபத்வா கேட்கட்டும்.

அன்னாரை பொய்ப்படுத்துவதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எவ்வாறு பொய்ப்படுத்துதலாகும் என்பது தொடர்பாக மேலும் விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஒரு முஜத்தித் வருவார் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாக்குறுதி வழங்கியிருந்தார்கள். அது பொய்யானது. பிறகு அன்னார் இமாமுக்கும் மின்கும் அதாவது உங்களிலிருந்தே உங்களுக்கு இமாமாக இருப்பார் என்று கூறியதும் தவறாகும். அல்லாஹ் பாதுகாப்பானாக. மேலும் சிலுவை குழப்பத்தின் காலத்தில் ஒரு மஸீஹைப் பற்றிய நற்செய்தி வழங்கியதும் நவூதுபில்லாஹ் தவறானதாகி விட்டது. ஏனென்றால் குழப்பம் இருக்கின்றது. ஆனால் வர வேண்டிய அந்த இமாம் இன்னும் வரவில்லை என்று ஒருவர் கூறுகின்றார் என்றால் அவர் செயல் வடிவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பொய்ப்படுத்துகின்றாரா? இல்லையா?

நான் உங்களுக்கு விளக்கமாகக் கூறுகின்றேன். என்னை பொய்ப்படுத்துவது என்பது சாதாரண விஷயமல்ல. என்னை காஃபிர் என்று கூறுவதற்கு முன்பு நீங்கள் காஃபிராக வேண்டியது வரும். என்னை மார்க்கமற்றவன் என்றும் வழிதவறியவன் என்றும் கூறுவதற்கு முன்பு உங்களுடைய வழிகேட்டை ஏற்றுக் கொள்ள வேண்டியது வரும். என்னை திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸை கைவிட்டு விட்டவன் என்று கூறுவதற்கு முன்பு உங்களுக்கு திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸை கைவிட வேண்டியது வரும். பிறகும் அவரே அவற்றை கை விட்டு விடுவார். நான் திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸை மெய்ப்படுத்தவே வந்துள்ளேன். நான் வழிதவறியவன் அல்ல. மாறாக, நேர்வழி வழங்குபவனே ஆவேன். நான் காஃபிர் அல்ல. மாறாக, முஃமின்களில் முதன்மையானவனைப் போன்றவன் ஆவேன். நான் கூறுகின்ற அனைத்தும் உண்மையாகும். அதை இறைவன் எனக்கு வெளிப்படுத்தி இருக்கின்றான். எவருக்கு இறைவன் மீது நம்பிக்கை இருக்குமோ, மேலும் எவர் திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையாளர் என்று ஏற்றுக் கொண்டுள்ளாரோ அவர் நான் கூறுவதை கேட்டு அமைதியாக இருப்பதே அவரின் மீது அத்தாட்சி


O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

**O.A.N. DOORS & STEELS**

All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

**ALIF AUTO CARE**
Pudupet, Chennai.
Ph: 98847 74525

**CITY HARDWARE STORE'S**
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

**ரஹ்மானியா**
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
S.S. அஸன் அபூபக்கர்
✆ 94869 37769

முழுமை அடைதல் ஆகும். ஆனால், எவர் (எதிர்ப்பதில்) துணிபவராகவும், துரதிஷ்டவாதியாகவும் உள்ளாரோ அவருக்கு என்ன சிகிச்சை செய்வது? அல்லாஹ்வே அவருக்கு புரிய வைப்பான். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 14-18; 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

பிறகு, மஸீஹின் வருகை பற்றிய ஒரு சில அடையாளங்களைப் பற்றி எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள் :

உண்மையில் இந்த இரயில்வே மஸீஹ் மவ்வூதின் அடையாளமாகும். திருக்குர்ஆனிலும் இது தொடர்பான சைகை உள்ளது. وَإِذَا الْعِشَارُ عُطِّلَتْ அதாவது, பத்து மாத கர்ப்பிணி பெண் ஒட்டகங்கள் கைவிடப்படும்போது என்று வந்துள்ளது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: இறையச்சத்தில் மார்க்கமுடைமை உள்ளது. لَيُتْرَكَنَّ الْقِلَاصُ அதாவது, ஒட்டகங்கள் கைவிடப்படும் போது என்பதில் ரயில் பற்றிய முன்னறிவிப்பு இருப்பதை சிந்திப்பவர்கள் உணர முடியும். இதன் பொருள் இரயில் இல்லை என்றால் பிறகு ஒட்டங்கள் எதனால் கைவிடப்–பட்டது என்கின்ற சம்பவத்தை அவர்கள் கூற வேண்டும். முந்தைய வேதங்களிலும் கூட முன்னறிவிப்பு உள்ளது. அதாவது அந்த காலத்தில் போக்குவரத்து எளிதாகி விடும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: உண்மை என்னவென்றால், எந்த அளவுக்கு அடையாளங்கள் நிறைவேறி விட்டதென்றால் இவர்கள் இந்த மைதானத்தை விட்டே ஓடி விட்டனர். மஹ்தியின் அடையாளமாக குறிப்பிடப்பட்டிருந்த சூரிய சந்திர கிரகணங்கள் ரமலான் மாதத்தில் வெளிப்படவில்லையா? அதே போன்று வாகனங்களும் வந்து விட்டன. இந்த அடையாளங்கள் கூறுவது என்னவென்றால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வந்து விட்டார். இவர்கள் நம்மை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் பிறகு வேறொருவரை தேட வேண்டும். மேலும் அவர் யார் என்று கூற வேண்டும். ஏனென்றால் அவருக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த அனைத்து அடையாளங்களும் பூர்த்தியாகி விட்டன. (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 54-55; 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: என்னை பரிசோதிக்க வேண்டுமென்றால் நபித்துவ வழியில் பரிசோதிக்க வேண்டும். நல்லெண்ணத்தோடு நற்பேற்றோடு, ஆதாரங்களை கண்டு புரிந்து கொள்ளுங்கள். பிடிவாதம் கொண்டால் ஒன்றும் தெரியாது. திருக்குர்ஆனும் கூட நேர்வழி வழங்காது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: நபித்துவ வழியில் இதை பரிசோதியுங்கள். பிறகு உண்மை யாரோடு இருக்கிறது என்பதை பாருங்கள். கற்பனையான தத்துவங்கள் மற்றும் ஆலோசனைகளால் ஒன்றும் நடக்காது. மேலும் நானும் கற்பனையான விஷயங்களைக் கொண்டு என்னை உண்மைப்–படுத்தவில்லை. நான் எனது வாதத்தை நபித்துவ வழியில் எடுத்து வைக்கின்றேன். அவ்வாறிருக்க அதே தத்துவத்தின் அடிப்படையில் அந்த வாதத்தை பரிசோதிக்காமல் இருப்பதற்கு என்ன காரணம்? எவர் மனம் திறந்து எனது விஷயங்களை கேட்பாரோ நிச்சயமாக அவர் பலன் பெறுவார். மேலும் ஏற்றுக் கொள்வார். ஆனால் எவர் உள்ளத்தில் கருமித்தனம் மற்றும் காழ்ப்புணர்ச்சியைக் கொண்டுள்ளாரோ அவருக்கு என்னுடைய விஷயங்கள் எவ்வித பயனையும் அளிக்காது. அவர்களின் உதாரணம் ஒன்று இரண்டாக காட்சியளிக்கக்கூடிய பார்வை குறையுடைய மனிதரைப் போன்றதாகும். அவருக்கு எல்லாம் இரண்டாகத் தெரியும். அவருக்கு எந்த அளவுக்கு ஆதாரங்களை வழங்கினாலும் இரண்டு அல்ல; ஒன்று தான் என்று கூறினாலும் அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு சம்பவத்தை எடுத்துக் கூறுகின்றார்கள்: அதே போன்ற பார்வை குறையுடைய ஒரு மனிதர் ஒருவரிடம் வேலை செய்து வந்தார். எஜமானர் அவரிடம் உள்ளே இருந்து கண்ணாடியை கொண்டு வாருங்கள் என்று கூறினார். அவர் திரும்பி வந்து உள்ளே இரண்டு கண்ணாடிகள் இருக்கின்றது. எதைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டார். எஜமானர் கூறினார். ஒன்று தான் இருக்கின்றது. இரண்டு அல்ல என்றார். அந்த பார்வை குறையுடைய மனிதர், பிறகு நான் பொய்யனா என்றார். நான் இரண்டு பார்த்தேன். ஆனால் நீங்களோ ஒன்று என்கின்றீர்கள் என்றார். அதற்கு எஜமானர் அம்மனிதரிடம் அப்படியென்றால் அதில் ஒன்றை உடைத்து விடு. அடுத்ததை கொண்டு வா என்றார். அப்போது உடைத்த போது தான் தெரிய வந்தது. ஒன்று மட்டும் தான் இருந்தது. அதை அவர் உடைத்து விட்டார் என்பது புரிந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: எனக்கு எதிராக உள்ளவர்கள் இது போன்றவர்களே ஆவார்கள். இவர்கள் மீண்டும் மீண்டும் எடுத்து வைப்பது ஹதீஸ்களே ஆகும். ஆனால் அந்த ஹதீஸ் தொடர்பாகவும் கூட இவர்கள் சந்தேகம் கொள்கின்றனர். ஒரு காலத்தில் அவர்களின் இது போன்ற நடத்தைகளை மக்கள் எள்ளி நகையாடுவார்கள் என்று அவர்களுக்கு தெரியவில்லை. உண்மையை தேடுகின்ற ஒவ்வொருவரும் நம்மிடம் அதைக் கேட்க உரிமை உடையவராக இருக்கின்றார். அதற்கு நாமும் நபிமார்கள் எதை முன் வைத்தார்களோ அதையே முன் வைக்கின்றோம். திருக்குர்ஆன், ஹதீஸ் மற்றும் அறிவு சார்ந்த ஆதாரங்களை அதாவது காலத்தின் தேவைகளை முன் வைக்கின்றோம். பிறகு இறைவன் எனது கைகளால் வெளிப்–படுத்திய அடையாளங்களை காட்டுகின்றோம். நான் ஒரு வரைபடத்தை தயார் செய்துள்ளேன். அதில் ஏறக்குறைய 150 அடையாளங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கு கோடிக்கணக்–கானோர் சாட்சியாக இருக்கின்றனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: வீணான விஷயங்களை எடுத்து வைப்பது என்பது நற்பேறு பெற்றவர்களின் பணியல்ல.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: இதன் காரணமாகத் தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர் வர வேண்டியவர் ஹகமாக அதாவது நீதி நெறி தீர்ப்பவராக வருவார் என்று கூறினார்கள். அவருடைய தீர்ப்பை ஏற்றுக் கொள்ளுங்கள் என்றார்கள். எவர்களுடைய உள்ளத்தில் விஷமம் உள்ளதோ அவர்கள் ஏற்க விரும்பாததன் காரணத்தால் வீணான அத்தாட்சிகளையும், ஆட்சேபனைகளையும் முன் வைக்கின்றனர். அவர்கள் நினைவில் கொள்ளட்டும். அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப வலுவான தாக்குதல்–களால் எனது உண்மையை நிரூபிப்பான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: நான் நிச்சயமாக நம்புகின்றேன். நான் பொய்யாக கூறினால் அவன் உடனடியாக என்னை அழித்திருப்பான். ஆனால் எனது இந்த அனைத்து விஷயங்களும் அவனுடையதாகும். நான் அவன் புறமிருந்தே வந்துள்ளேன். என்னை பொய்ப்படுத்துவது என்பது அவனை பொய்ப்படுத்துவதாகும். எனவே அவனே எனது உண்மையை வெளிப்படுத்துவான். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 34-35; 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

மல்லவிகளின் பிடிவாத தன்மை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய காலத்திலும் இருந்தது. அதைத்தான் அன்னார்


B. Mohamed Adil
✆ 93632 06679
99433 38000




National
Watch Company
Sales & Service
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

halal
Grill house
A/c
multi cuisine family
restaurant
Thennampalayam, Near 'Centi Win' Company,
Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222

93600 05888
78716 00664
IBR
Construction Materials



எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹாலோபிளாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.

கூறினார்கள். அவர்கள் ஆதாரத்தை கொண்டு பேச விரும்புவதில்லை. மேலும் புரியவும் விரும்புவதில்லை. இன்றும் அவர்களது நிலைமை அவ்வாறே உள்ளது.

அடையாளங்கள் தொடர்பாக மேலும் விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: முதலில் திருக்குர்ஆன் மற்றும் தவ்ராத்தின் முன்னறிவிப்பிற்கு ஏற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களோடு ஒப்புமை உடையவர்கள் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளீர்கள். அந்த ஒப்புமைக்கு மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், இதற்கு முன்னரும் கூறப்பட்டது போன்று மூஸாவின் உம்மத்தில் அன்னாருக்கு பிறகு கலீஃபாக்களின் தொடர் இருந்தது போன்று இங்கும் வர வேண்டியது இருந்தது. வேறு எந்த ஆதாரங்கள் இல்லாமல் இருந்தாலும் கூட இந்த ஒப்புமை –யானது இயல்பாகவே ஒரு கலீஃபாக்களின் தொடர் இருக்க வேண்டும் என்பதை எதிர்பார்க்கின்றது.

இரண்டாவதாக, கிலாஃபத் பற்றிய வாக்குறுதி வழங்கிய அந்த வசனத்தில் அல்லாஹ் கிலாஃபத்தின் தொடரை உருவாக்குவதாக வாக்குறுதி வழங்கியுள்ளான். மேலும் அந்த தொடரை முந்தைய கிலாஃபத்தின் தொடரோடு ஒத்ததாக கூறி இருக்கின்றான். கமஸ்தஹ்லஃபல்லதீன மின் கப்லிஹிம் என்று கூறியுள்ளான். இந்த கிலாஃபத் பற்றிய முன்னறிவிப்புள்ள வசனத்திற்கேற்ப இந்த ஒப்புமைக்கு மிக முக்கியமானது என்னவென்றால், மூஸாவின் உம்மத்தில் காத்தமுல் குலஃபாவாக மஸீஹ் வந்ததைப் போன்று இந்த உம்மத்திலும் காத்தமுல் குலஃபாவாக ஒருவர் வர வேண்டியதிருந்தது.

மூன்றாவது விஷயம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இமாமுகும் மின்கும் என்று கூறியுள்ளார்கள். அதாவது உங்களிலிருந்தே உங்களுக்கு இமாமாக இருப்பார்.

நான்காவது விஷயம், ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஒரு முஜத்தித் தோன்றுவார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

எனவே இந்த நூற்றாண்டிலும் ஒரு முஜத்தித் வர வேண்டியது அவசியமாக இருந்தது. மேலும் அக்காலத்திலுள்ள குழப்பங்களை சீர்திருத்துவதே முஜத்திதின் பணியாகும். எனவே இக்காலத்தில் அதிகமாக இருக்கக்கூடிய குழப்பம் கிறித்தவ குழப்பமாகும். எனவே இந்த காலத்தின் முஜத்தித் சிலுவையை முறிக்கக் கூடியவராக இருக்க வேண்டும். அவருடைய இன்னொரு பெயர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆகும்.

ஐந்தாவது விஷயம் என்னவென்றால், மூஸாவின் கிலாஃபத்தின் ஒப்புமையின் அடிப்படையில் காத்தமுல் குலஃபா இந்த உம்மத்தின் 14 ஆம் நூற்றாண்டில் வர வேண்டியது இருந்தது. ஏனென்றால் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களிலிருந்து 14 ஆம் நூற்றாண்டில் தான் மஸீஹ் (அலை) அவர்கள் வந்தார்கள்.

ஆறாவது விஷயம் என்னவென்றால், வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்காக சொல்லப் –பட்டிருந்த விஷயங்களில் பெரும்பாலானவை நிறைவேறி விட்டது. உதாரணமாக, ரமலானில் சூரிய சந்திர கிரகணங்கள் இரண்டு முறை நடைபெற்று விட்டது. ஹஜ் தடை செய்யப்படுதல், வால் நட்சத்திரம் வெளிப்படுதல், பிளேக் நோய் பரவுதல், இரயில் கண்டுபிடிப்பு, ஒட்டகங்கள் கைவிடப்படுதல் போன்றவையாகும்.

சூரா ஃபாத்திஹாவின் துஆவிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், வரக்கூடியவர் இந்த உம்மத்திலிருந்து வருவார்.

சுருக்கமாக, ஒன்று இரண்டு அல்ல. மாறாக, நூற்றுக்கணக்கான சான்றுகள் உள்ளன. அதாவது, வரக்கூடியவர் இந்த உம்மத்திலிருந்து தான் வர வேண்டும். மேலும் வர வேண்டிய நேரமும் இதுவே ஆகும். இறைவனுடைய இல்ஹாம் மற்றும் வஹீயின் மூலமாக நான் கூறுகின்றேன். வர இருந்தவன் நானே ஆவேன். ஆரம்பத்திலிருந்தே அல்லாஹ் நபித்துவ வழியில் வழங்கி இருக்கக் கூடிய ஆதாரங்களை எவர் விரும்புகின்றாரோ அவர் பெற்றுக் கொள்ளட்டும். எனக்கு ஆதரவாக வெளிப்பட்ட ஆதாரங்களை பாருங்கள். எதிரிகளின் நிலையைக் கண்டு எனக்கு மிகவும் வருத்தம் ஏற்படுகின்றது. அவர்கள் எதையெல்லாம் அடையாளமாக கூறி வந்தார்களோ அவைகள் நிறைவேறிய போது அதன் உண்மைத்தன்மை பற்றி ஆட்சேபிக்கின்றனர்.

உதாரணமாக, ஆரம்பத்தில் சூரிய சந்திர கிரகண அடையாளத்தை கேட்டு வந்தனர். இப்போது அவர்கள் அந்த ஹதீஸ் சரியானதல்ல என்கின்றனர். ஆனால் எவரேனும் அவர்களிடம் எதை இறைவன் சரியானதாக நிரூபித்திருக் –கின்றானோ அது அவர்கள் கூறுவதனால் பொய்யாகி விடுமா? என்று கேட்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால் இதனால் நாம் மஸீஹை பொய்ப்படுத்தவில்லை. மாறாக, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பொய்ப்படுத்துகின்றோம் என்பதற்காக அவர்கள் வெட்கப்படவும் இல்லை. என்னுடைய உண்மைக்கு ஆதரவாக சூரிய சந்திர கிரகணம் மட்டுமல்ல. மாறாக, ஆயிரக்கணக்கான சான்றுகளும் சாட்சியங்களும் உள்ளன. ஒன்று இல்லாவிட்டாலும் கூட ஒன்றும் கெட்டுப்போகப் போவதில்லை. ஆனால் இந்த முன்னறிவிப்பு பொய் என்று கூற முடியாது. வருத்தம் என்ன –வென்றால் இவர்கள் என்னை எதிர்ப்பதற்காக உண்மையாளர்களின் தலைவரான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றை பொய்யாக்க முயற்சிக்கின்றனர். நான் இந்த முன்னறிவிப்பை மிக வலுவோடு வைக்கின்றேன். ஏனென்றால், இது நமது எஜமானரின் உண்மைக்கு இவர்கள் சான்றாகும். எனவே கணிப்பின் மை கொண்டு எழுதிய ஹதீஸ்களை சம்பவம் நிகழ்ந்தேறி உண்மைப்படுத்தியது. இப்போது அதை நிராகரிப்பது நம்பிக்கையற்றதும், சாபத்திற்குரியதும் ஆகும். ஹதீஸ்களை ஆராய்பவர்கள் நாங்கள் திருடர்களை பிடித்து விட்டோம் என்றா கூறுகின்றனர். இல்லை. மாறாக, எந்த ஹதீஸ்கள் சரியில்லையோ அது தொடர்பாக இன்ன நபரின் நினைவாற்றல் சரியில்லை. மேலும் அவரின் உண்மைத் தன்மையில் சற்று சந்தேகங்கள் உள்ளன என்றே கூறுவர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: ஒரு ஹதீஸ் வெளிப் –படையாக எவ்வளவுதான் பலவீனமானதாக இருந்தாலும் கூட அதன் முன்னறிவிப்பு நிறைவேறி விட்டால் பிறகு அது சரியானதாகி விடுகின்றது என்பதை ஹதீஸ் வல்லுனர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். அந்த அடிப்படையில் இந்த ஹதீஸ் சரியானது இல்லை என்று கூற எவ்வாறு துணிச்சல் வரும்?

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: நினைவில் கொள்ளுங்கள். நேரடியான வாசகங்களின் மூலமாக வரக் கூடியவர் பரிசோதிக்கப்படுகின்றார். அவைகள் அவருக்கு உதவுகின்றன. பிறகு அறிவு எந்த உதாரணமுமின்றி ஒரு விஷயத்தை ஏற்றுக் கொள்ளாததன் காரணமாக அத்தோடு அறிவு சார்ந்த ஆதாரங்களும் வழங்கப்படுகின்றது. அது சாட்சியாக வழங்கப்படுகின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக இறை உதவி அவரோடு இருக்கின்றது. எவருக்கேனும் சந்தேகம் இருக்கும் என்றால் அவர் என் முன்னால் வந்து நபித்துவ வழியின் அடிப்படையில் எனது உண்மைக்கான சான்றை என்னிடமிருந்து பெறட்டும். நான் பொய்யனாக இருப்பேன் என்றால் நான் ஓடி விடுவேன். ஆனால் அவ்வாறில்லை. அல்லாஹ் 19 வருடங்களுக்கு முன்பு என்னிடம் கூறினான். யன்சுரகல்லாஹு ஃபி மவாதின் அதாவது இறைவன் பல மைதானங்களில் உமக்கு உதவுவான். இதை எழுதுவதற்கு 19 ஆண்டுகளுக்கு முன்பு அன்னாருக்கு இந்த இல்ஹாம் இறங்கியது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: எனவே, நபிமார்கள் எவ்வாறு பரிசோதிக்கப்பட்டார்களோ அதே போன்று சோதித்து பாருங்கள். அந்த தரத்தில் நிச்சயமாக என்னை உண்மையாளனாக கண்டு கொள்வீர்கள் என்று நான் வாதம் செய்து கூறுகின்றேன்.

நாம் பார்க்கின்றோம் அல்லாஹ் பல்வேறு மைதானங்களில் அன்னாருக்கு உதவிசெய்துள்ளான்.

**Classic Mobile's & Watch, Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

**0422-2399980, 4351980**
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com
**Metro Zone**
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE

**276, N.H. Road, Coimbatore - 641 001.**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: நான் இந்த விஷயங்கள் சுருக்கமாக கூறியுள்ளேன். இதை நீங்கள் சிந்தித்து பாருங்கள். இறைவனிடம் துஆ செய்யுங்கள். அவன் வல்லமையுள்ளவன் ஆவான். ஏதேனும் வழியை திறப்பான். அவனது உதவி ஒத்தாசைகள் உண்மையாளருக்கே கிடைக்கின்றன. (மல்.'.பூஸாத் தொகுதி 4 பக்கம் 38-41; 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

அன்னாரின் சபையில் மவ்லவிமார்கள் பற்றி பேசப்பட்டது. ஒருவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் மவ்லவிமார்கள் இப்போது மஸீஹ் (அலை) அவர்களுடைய மரணம் உறுதியாகின்ற குத்பாவை கொடுப்பதில்லை என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: அவர்கள் இனி மேல் பெயரைக் கூட எடுக்க மாட்டார்கள். மேலும் எவராவது அவரைப் பற்றி பேசினால் அவர்கள் மஸீஹ் மற்றும் மஹ்தியின் பேச்சையே விட்டு விடுங்கள் என்று கூறுவார்கள். (மல்.'.பூஸாத் தொகுதி 4 பக்கம் 286; 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும், மவ்லவியின் நிலை இதுவேயாகும். அவர்கள் தமது சுய நலன்களுக்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை எதிர்க்கின்றனர். தாம் மட்டும் எதிர்ப்பதில்லை. மாறாக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் அன்னாரின் ஜமாஅத்தோடு பொய்யான விஷயங்களை சேர்த்து முஸ்லிம் மக்களின் உள்ளத்தில் ஜமாஅத்திற்கு எதிராக வெறுப்பை உருவாக்குகின்றனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உண்மையை அறிந்து கொள்வதற்கான வழிமுறையை கூறியவாறு கூறினார்கள்: உண்மையை அறிய வேண்டுமென்றால் பிறகு இறைவனிடம் தொழுகையில் துஆ கேளுங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: மனிதன் வெறுப்பு மற்றும் பிடிவாதத்தை விட்டு விலகி உண்மை வெளிப்படுவதற்காக இறைவன் பக்கம் கவனம் செலுத்தினால் நாற்பது நாட்கள் முழுமை அடைந்திருக்காது அதற்கு முன்பே அவருக்கு உண்மை வெளிப்படும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். உண்மையை தேடுவதற்காக தூய உள்ளத்தோடு தேடினால் நிச்சயம் வெளிப்படும். ஆனால் மிக குறைவானவர்களே இந்த நிபந்தனையோடு இறைவனிடத்தில் தீர்ப்பை எதிர்பார்க்கின்றனர். தங்களுடைய குறைமதி மற்றும் வெறுப்பு மற்றும் பிடிவாதத்தின் காரணமாக இறைவனுடைய வலியை மறுக்கின்றனர். அதன் காரணமாக ஈமானை வீணாக்கி விடுகின்றனர். ஏனென்றால் வலியின் மீது நம்பிக்கை இல்லையென்றால் அதன் காரணமாக நபித்துவத்தையும் மறுக்க வேண்டியது வருகின்றது. நபியை மறுப்பதன் மூலமாக இறைவனை மறுக்க வேண்டியது வருகின்றது. இவ்வாறு முற்றிலுமாக ஈமான் பறிக்கப்பட்டு விடுகின்றது. (மல்.'.பூஸாத் தொகுதி 4 பக்கம் 16; 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

அல்லாஹ் முஸ்லிம்களுக்கு அறிவை வழங்குவானாக. அவர்கள் மவ்லவிகளின் பேச்சில் விழாதிருப்பார்களாக. தங்களது அறிவை பயன்படுத்துவார்களாக. மேலும் கலப்பற்ற முறையில் இறைவனிடம் உதவியை நாடுபவர் –களாக திகழ்வார்களாக. அல்லாஹ் அவர்களது உள்ளத்தை திறப்பானாக. மேலும் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு இன்றைய நாட்களில் முஸ்லிம் உலகம் சிக்கித் தவிக்கும் வித்தியாசமான இந்த நிலையிலிருந்து வெளியில் வருவார்களாக. இவர்களுக்கு அதிலிருந்து தப்பிப்பதற்கான எவ்வித வழியும் தென்படவில்லை. பாகிஸ்தானிலும் புத்துபுது அமைப்புகள் உருவாகி உள்ளன. லப்பைக் யா ரஸூலல்லாஹ் என்ற அமைப்பு நடை பயணம் சென்று லாஹூரை சிறை முற்றுகையிட்டனர். பிறகு இஸ்லாமாபாத்தை முற்றுகையிட்டுள்ளனர். பிறகு அதே பெயரை உடைய இன்னொரு அமைப்பு இஸ்லாமாபாத்தை முற்றுகையிட்டுள்ளனர். எந்த இராணுவமும் எந்த சட்டமும் அவர்களை தடுக்க முடியவில்லை.

லப்பைக் யா ரஸூலல்லாஹ் என்று கூறக் கூடியவர்கள் உண்மையில் அஹ்மதிகளாகிய நாமே ஆவோம். நாம்தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பேச்சைக் கேட்டு அதாவது எனது மஸீஹ், மஹ்தி வந்தால் அவரை ஏற்றுக் கொள்ளுங்கள். மேலும் அவருக்கு எனது ஸலாமை கூறுங்கள் என்ற கூற்றுக்கிணங்க லப்பைக் யா ரஸூலல்லாஹ் என்று உண்மையில் கூறுபவர்கள் ஆவர். இதுதான் லப்பைக் என்று கூறுவதற்கான சரியான வழியாகும். இதை இம்மக்கள் புரிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். வெறும் வரட்டு முழக்கங்களுக்கு பதிலாக லப்பைக் யா ரஸூலல்லாஹ் என்பதன் உண்மையைப் புரிய வேண்டும்.

அல்லாஹ் உலகத்தையும், பாகிஸ்தானையும், எல்லா முஸ்லிம் நாடுகளையும் குழப்பத்திலிருந்து காப்பாற்றுவானாக. அல்லாஹ் முஸ்லிம்களின் மீது குறிப்பான கருணை புரிவானாக. ஏனென்றால் இன்றைய நாட்களின் நிலைமை மற்றும் முஸ்லிம் நாடுகளுக்கெதிரான சதித்திட்டங்கள் மிகவும் அபாயகரமானதாகும். இவர்கள் இப்போதும் புரியவில்லை என்றால் பிறகு வருந்துவார்கள். அல்லாஹ் கருணை புரிவானாக.

★ ★ ★ ★ ★


குமரி மாவட்டத்தில்
இஸ்லாமிய புத்தகங்கள் மற்றும்
பத்ர் வார இதழ் சம்பந்தமாக
**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**
1029, கேப் ரோடு (அரசுப் பள்ளி எதிரில்)
இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில்.
Cell : 9791305610
Email : amjnagercoil@gmail.com



**திருக்குர்ஆனிலிருந்து...**

தங்கள் செல்வத்தை மக்களுக்குக் காட்டுவதற்காகச் செலவு செய்வோரும், அல்லாஹ்விடத்தும், இறுதி நாளிடத்தும், நம்பிக்கை கொள்ளாதவரும் (ஷய்த்தானின் கூட்டாளியாவர்.).... (4:39)

**முஹம்மது ஹுஸைன்**
பழனி

**திருக்குர்ஆனிலிருந்து...**

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அதிகமான யூகங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். ஏனெனில், சில யூகங்கள் பாவமாகும். பிறர் குற்றங்களைத் தேடி அலையாதீர்கள். உங்களுள் ஒருவருக் -கொருவர் புறங்கூறாதீர்கள்.... (49:13)

**மர்ஹூமா இலாஹி ஜைனப் கனி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

**திருக்குர்ஆனிலிருந்து...**

நம்பிக்கை கொண்டவர்களே! ஒரு சமுதாயத்தினர் இன்னொரு சமுதாயத்தினரை ஏளனம் செய்ய வேண்டாம். ஒருவேளை அவர்கள் இவர்களை விடச் சிறந்தவர்களாக இருக்கலாம்..... (49:12)

**M.Y. ஷாஹுல் ஹமீது**
மற்றும் குடும்பத்தினர், திருச்சி.

**திருக்குர்ஆனிலிருந்து...**

மேலும் அல்லாஹ்விடம் நீங்கள் செய்திருக்கும் உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். அல்லாஹ்வை உங்கள் பொறுப்பாளியாக்கிச் சத்தியங்களை உறுதிப்படுத்திய பின்னர், அவற்றை முறிக்காதீர்கள். நிச்சயமாக, அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிகின்றான். (16:92)

**பீ.ஜே. சுலைமான்**
மற்றும் குடும்பத்தினர், கோயம்புத்தூர்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் செய்கின்றவர்களுக்கு, மன்னிப்பும் மகத்தான நற்பலனும் (விதிக்கப்பட்டு) உள்ளனவென்று அல்லாஹ் அவர்களிடம் வாக்குறுதியளித்துள்ளான். (5:10)

**S. முஹம்மது இஸ்மாயீல்**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினர்களுக்கோ எதிராக இருப்பினும், அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவர் களாயிருங்கள்.... (4:136)

**S.H. வஸீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்

# ஜுமுஆ பேருரை

**கடந்த குத்பாவில் நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களிலிருந்து சிலவற்றைக் கூறி இருந்தேன். அன்னார் கூறினார்கள்: மனிதன் காழ்ப்புணர்ச்சியிலிருந்தும் எல்லா விதமான பிடிவாதத்திலிருந்தும் தூய்மையாகி அல்லாஹ்விடம் துஆ செய்தால், நிம்மதியிழந்தவாறு தொழுகையில் அல்லாஹ்விடம் துஆ செய்தால் நாற்பது நாட்களுக்குள் அல்லாஹ் அவருக்கு உண்மையை வெளிப்படுத்துவான். ஆனால் தூய்மையான உள்ளத்தை கொண்டிருப்பதும், எல்லா விதமான காழ்ப்புணர்ச்சியிலிருந்தும் விலகியிருப்பதும் மிகவும் அவசியமாகும்.**

பலருக்கும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது காலத்தில் அன்னாரது வாழ்க்கையிலேயே கனவின் மூலமாக அல்லாஹ் வழிகாட்டலை வழங்கினான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது காலத்தில் தொடங்கிய இந்த தொடர் இன்றும் நிலைத்திருக்கின்றது. நல்லியல்பு கொண்ட மக்களுக்கு அல்லாஹ் வழிகாட்டவும் செய்கின்றான்.

**உலகின் பல்வேறு நாடுகளில் வாழ்கின்ற நல்லியல்பு கொண்டுள்ள உண்மையைத் தேடுகின்ற மக்களுக்கு அல்லாஹ்வின் புறமிருந்து கனவுகள் மற்றும் ஆன்மீகக் காட்சிகள் மூலம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவம் பற்றி வழிகாட்டல் கிடைத்திருக்கின்ற ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்களை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.**

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 24 நவம்பர் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **24 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ـ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ـ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ـ اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ ـ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ـ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ـ

கடந்த குத்பாவில் நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களிலிருந்து சிலவற்றைக் கூறி இருந்தேன். அன்னார் கூறினார்கள்: மனிதன் காழ்ப்புணர்ச்சியிலிருந்தும் எல்லா விதமான பிடிவாதத்திலிருந்தும் தூய்மையாகி அல்லாஹ்விடம் துஆ செய்தால், நிம்மதியிழந்தவாறு தொழுகையில் அல்லாஹ்விடம் துஆ செய்தால் நாற்பது நாட்களுக்குள் அல்லாஹ் அவருக்கு உண்மையை வெளிப்படுத்துவான். ஆனால் தூய்மையான உள்ளத்தை கொண்டிருப்பதும், எல்லா விதமான காழ்ப்புணர்ச்சியிலிருந்தும் விலகியிருப்பதும் மிகவும் அவசியமாகும்.

இல்லையென்றால் அன்னார் இதையும் கூறியுள்ளார்கள். ஒருவர் உள்ளத்தில் காழ்ப்புணர்ச்சி -யையும், கோபத்தையும் வைத்திருந்தால் அல்லது தூய சிந்தனைகளை உடையவராக இல்லாமல் இருந்தால் அவர்கள் எப்போதும் அல்லாஹ் எங்களுக்கு கனவின் மூலமாக வழிகாட்டவில்லை என்றே கூறினார்கள். அல்லது அன்னாருக்கு எதிராகவே கூறப்பட்டது என்று கூறினார்கள். எவ்வாறிருப்பினும் எவர்கள் தூய உள்ளத்துடன் துஆ செய்வார்களோ அவர்களுக்கு அல்லாஹ்வின் தரப்பிலிருந்து வழிகாட்டல் கிடைக்கின்றது. பலருக்கும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது காலத்தில் அன்னாரது வாழ்க்கையிலேயே கனவின் மூலமாக அல்லாஹ் வழிகாட்டலை வழங்கினான்.

ஒரு சபையில் லாஹூரிலிருந்து வந்த ஒருவரது கடிதம் பற்றி பேசப்பட்டது. அவருக்கு கனவில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொடர்பாக அன்னார் உண்மையாளர் என்று கூறப்பட்டது. ஒரு ஃபக்கீருடன் அந்த மனிதருக்கு தொடர்பு இருந்தது. ஏதோவொரு ஃபக்கீரின் முரீதாக அவர் இருந்தார். அவர் தாதா கன்ஞ் பக்ஸின் கபருக்கு அருகில் வசித்து வந்தார். அந்த மனிதர் ஃபக்கீரிடம், மிர்ஸா சாஹிப் இந்த குறுகிய காலகட்டத்தில் முன்னேற்றம் அடைந்திருப்பது அவரது உண்மைத்துவத்திற்கான சான்றாகும் என்று கூறினார். பிறகு இன்னொரு பக்கீரும் அங்கிருந்தார். அவர் அங்கு அமர்ந்திருந்தார். அவர், பாபா! எங்களையும் கேட்க விடுங்கள் என்று கூறினார்.

இரண்டாவது நாள் அவர் இறைவன் மிர்ஸா சாஹிப் மவ்லா ஆவார் என்று கூறினான் என்று கூறினார். அதற்கு முதலாவது பக்கீர், மவ்லானா என்று கூறப்பட்டிருக்கும். அதாவது எனது, உனது மற்றும் நம் அனைவரது மவ்லா அதாவது நண்பர் ஆவார் என்று கூறினார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதைக் கேட்டு விட்டு கூறினார்கள்: இன்றைய நாட்களில் கனவுகள் அதிகமாக வருகின்றன. இதிலிருந்து தெரிய வருவது என்வென்றால், அல்லாஹ் கனவின் மூலமாக மக்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றான். வானத்தில் தட்டாம்பூச்சிகள் சுற்றித்திரிவது போன்று இறைவனது வானவர்கள் எல்லா இடங்களிலும் சுற்றித் திரிகின்றனர். அவர்கள் மக்களின் உள்ளத்தில், ஏற்றுக் கொள்ளுங்கள்; ஏற்றுக் கொள்ளுங்கள் என்று போட்டுக் கொண்டே இருக்கின்றார்கள்.

பிறகு ஒருவரது நிலையைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை மறுக்கும் வகையிலான புத்தகங்களை எழுத எண்ணினார். அப்போது கனவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரிடம், நீ அவர்களை மறுக்கும் வகையில் புத்தகங்கள் எழுதுகிறாய். எதிராக எழுதுகிறாய். ஆனால் உண்மையில் மிர்ஸா சாஹிப் உண்மையாளர் ஆவார் என்று கூறினார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 188; 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது) அல்லாஹ் நல்லுள்ளம் கொண்ட மக்களுக்கு கூட தீய வேலைகளிலிருந்து அவர்களை காப்பாற்று -வதற்காக வழிகாட்டுகின்றான். அவர் எதிரியாக இருந்தார். அவர் அன்னாருக்கு எதிராக எழுத விரும்பினார். ஆனால் அவரது ஏதோவொரு நன்மை அல்லாஹ்விற்கு பிரியமானதாக இருந்தது. எனவே கனவின் மூலமாக அவரை இந்த விஷயத்திலிருந்து அவன் தடுத்து விட்டான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது காலத்தில் தொடங்கிய இந்த தொடர் இன்றும் நிலைத்திருக்கின்றது. நல்லியல்பு கொண்ட மக்களுக்கு அல்லாஹ் வழிகாட்டவும் செய்கின்றான். அவனுக்கு முன்னால் வழிகாட்டலை வேண்டி குனிகின்ற மக்களுக்கு அவர்கள் அறியாத நிலையில் இருந்தும் கூட அவர்களுக்கு அவன் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வந்து விட்டார் என்று வழிகாட்டுகின்றான். சில நேரங்களில் சிலருக்கு இது பற்றி தெரிய வந்து அவர்கள் அல்லாஹ்விடம் வழிகாட்டலை வேண்டும்போது அல்லாஹ் அவர்களுக்கு வழிகாட்டுகின்றான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது உண்மைத்துவத்திற்கான வழிகாட்டலை வழங்குவது தொடர்பான ஒரு சம்பவம் மேற்கு ஆப்ரிக்காவில் இருக்கின்ற மாலி என்ற நாட்டில் ஒரு மனிதருக்கு அல்லாஹ்விடமிருந்து இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது. மாலியின் முபல்லிக் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்.

முஸ்தஃபா தயாலு சாஹிப் அவர்கள் ஒரு நாள் கனவு கண்டார்கள். அவர்கள் சுவர்க்கத்தில் ஒரு அழகான வீட்டில் இருக்கின்றார்கள். வீட்டின் ஒரு புறம் தண்ணீர் ஓடுகின்றது. அதில் வெள்ளை நிறத்தையுடைய ஒரு பெரியவரின் புகைப்படம் உள்ளது. அவர் தலைப்பாகை அணிந்துள்ளார்.

அவர் கூறுகின்றார். நான் கனவு கண்ட சில நாட்களுக்குப் பிறகு தனது நண்பரிடம் சென்றேன். அவருடைய வீட்டில் அந்த பெரியவரின் புகைப்பட்டத்தைப் பார்த்தேன் என்று கூறுகிறார். அவர் தனது நண்பரிடம் இந்த பெரியவரின் புகைப்படத்தைப் பற்றி கேட்ட போது, இவர் இமாம் மஹ்தி ஆவார் என்று கூறப்பட்டது. உடனே அவர் தனது கனவைப் பற்றி கூறினார். மேலும் அஹ்மதிய்யத் தொடர்பாக மேலும் விரிவாக கேட்க விரும்பினார். அப்போது அஹ்மதி நண்பர், இன்று எங்களது மாதாந்திர கூட்டம் நடைபெற இருக்கிறது. நீங்கள் என்னுடன் வாருங்கள். அங்கு முபல்லிக்கிடம் நீங்கள் எல்லா விதமான கேள்விகளையும் கேட்கலாம் என்று கூறினார். இவ்வாறு அவர் கூட்டத்தில் கலந்து கொண்டார். கூட்டத்திற்குப் பிறகு நான் அஹ்மதியாகி விட்டேன் என்று அறிவிப்பு செய்தார். ஆனால் அதோடுமட்டுமல்லாமல் அவர் இந்த உண்மையை எனது அனைத்து சகோதர சகோதரிகளும் ஏற்றுக்

கொள்ள வேண்டும். எனவே நான் வீட்டிற்குச் சென்று எனது சகோதர சகோதரிகளுக்கும் இது தொடர்பாக எடுத்துக் கூறுவேன். இன்ஷா அல்லாஹ் நாளை அவர்கள் அனைவருடன் வந்து பைஅத் செய்வேன் என்று கூறினார்.

மறுநாள் சஹர் நேரத்தில் அனைத்து சகோதர சகோதரிகளும் ஒன்றிணைந்த போது அவர் அஹ்மதிய்யத் தொடர்பான தனது கனவை எடுத்துக் கூறினார். அதோடு அனைத்து சகோதர சகோதரிகளையும் பைஅத் செய்யுமாறு கூறினார். இதற்கு அனைத்து சகோதர சகோதரிகளும் அவரை ஏசிப் பேசினர்.

மேலும், உனக்கு இந்த புதிய மார்க்கத்தை ஏற்றுக் கொள்வதற்கான எந்த அவசியமும் இல்லை என்று அவர்கள் கூறினர். அதற்கு அவர் நான் கண்டிப்பாக பைஅத் செய்வேன் என்று கூறினார்.

அவர் கூறுகின்றார்: ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு சிறிது நேரம் அவர்கள் தூங்கினார்கள். அப்போது அவர்கள் கனவில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவர்களை சூரா ஹிஜ்ரின் 30 –வது வசனங்களை ஓதுமாறு கூறுவதாக கண்டார்கள். கண் விழித்த பிறகு அவர்கள் மிஷன் ஹவுஸிற்கு வந்தார்கள். சகோதர சகோதரிகளின் நிலைமையை எடுத்துக் கூறினார்கள். அதோடு கனவின் விளக்கத்தையும் கேட்டார்கள். அதற்கு முபல்லிக் சாஹிப் அவர்கள் அவருக்கு திருக்குர்ஆனின் இந்த வசனங் –களுக்கான விளக்கத்தை எடுத்துக் காட்டினார்கள். அதில் ஆதம் படைக்கப்பட்ட பிறகு மலக்குமார்கள் சஜ்தா செய்வது மற்றும் இப்லீஸின் கட்டுப்படாமை தொடர்பாக கூறப்பட்டிருந்தது. இன்று காலை நடந்த சம்பவம் தொடர்பாக அல்லாஹ்வின் தரப்பிலிருந்து வந்த வழிகாட்டல் ஆகும் இது என்று அவருக்கு எடுத்துக் கூறப்பட்டது. நீங்கள் பைஅத் செய்வது மலக்குமார்களின் நடவடிக்கைகளைப் போன்றதாகும் என்று அவரிடம் கூறப்பட்டது. எனவே அவர் உடனே பைஅத் செய்தார். இதன் மூலம் முறையாக ஜமாஅத்தில் இணைந்தார். அல்லாஹ்வின் அருளால் அவர் ஜமாஅத்தில் மிகவும் செயல் துடிப்புள்ள உறுப்பினர் ஆவார்.

இதேபோன்று ஐவெரிகோஸ்ட்டின் நகரத்தில் உள்ள கோராலாவு என்ற ஊரின் புதிய அஹ்மதி நண்பர் கூனிஆதுமா கனவின் மூலமாக அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட சம்பவத்தை கூறுகின்றார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: நான் தொழுவதற்காக பள்ளிவாசலுக்குச் செல்கின்றேன். அங்கு பள்ளிவாசல் தொழுகை –யாளிகளால் நிரம்பி இருப்பதை காண்கின்றேன். அங்கு தொழுகைக்காக நான் எனது முஸல்லாவை விரிக்கின்றேன். அப்போது ஒரு நபர், நான் எந்த இஸ்லாமிய அமைப்போடு தொடர்பு வைத்துள்ளேன் என்று வினவுகிறார். என்னிடமிருந்த முஸல்லாவையும் அவர் பறித்துக் கொள்கிறார். நான் அவரிடம் நான் அஹ்மதி முஸ்லிமாவேன் என்று பதில் கூறுகின்றேன். அப்போது அவர் என்னை அஹ்மதிய்யா பள்ளிவாசலுக்கு சென்று தொழுமாறு கூறுகிறார். இதற்குப் பிறகு எனக்கு மன திருப்தி ஏற்பட்டு விட்டது. அதற்குப் பிறகு நான் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டேன்.

இவ்வாறே யமன் நாட்டைச் சேர்ந்த ஒரு பெண்மணி ஜமீலா சாஹிபா தமது பைஅத் தொடர்பான சம்பவத்தை எடுத்துக் கூறுகின் –றார்கள்: நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றி அறிவதற்கு பல வருடங்களுக்கு முன்னால் சவூதி அரேபியாவில் இருந்தேன். அங்கு சூஃபிகளின் சிந்தனையின் பக்கம் ஆர்வம் அதிகமானது. மேலும் ஹஸ்ரத் அப்துல் காதிர் ஜெய்லானி அவர்களது நூல்கள் எனக்கு மிகவும் பிடித்துப் போனது. அவர்கள் இறைவனை அடைவதற்காக கூறிய வழிகளை கடைபிடித்ததன் காரணமாக நான் சிறிதளவு நிம்மதியை அடைந்தேன். மேலும் ஆன்மீகத்திற்கான உணர்வை அடைந்தேன். அந்த வழி என்னவென்றால் அதாவது அவர் எப்படி திக்ர் செய்வார் என்றால், நூறு நூறு முறை சூரா ஃபாத்திஹா, ஆயத்துல் குர்ஸி மற்றும் சூரா இஹ்லாஸ் ஓதிய பிறகு ஆயிரம் ஆயிரம் முறை ஸலவாத்தும், இஸ்திஹாராவும் செய்யப்படும். இது சூஃபிகளின் நடைமுறையாக இருந்தது. அவ்வாறு செய்து வந்த நாட்களில் நான் ஒரு நாள் கனவில் கண்டேன். அதாவது நிலாவைப் போன்ற ஒரு மிகப்பெரிய நட்சத்திரம் பூமியில் தோன்றியது. மேலும் அது பூமியில் நடமாடிக் கொண்டிருக்கிறது. மேலும் மாடியின் வழியாக எங்களுடைய வீட்டிற்குள்ளும் நுழைந்து விடுகிறது. நான் மிகவும் அஞ்சினேன்; வியப்படைந்தேன். பிறகு நான் விழித்து விட்டேன்.

பிறகு சில நாட்களுக்குப் பிறகு மேலும் ஐந்து நட்சத்திரங்களை கண்டேன். அது வரிசையாக பூமியில் நடமாடிக் கொண்டிருக்கிறது. ஆனால் அது முதலில் காட்சியளித்த நட்சத்திரத்தை விட வடிவத்தில் சிறியதாக இருந்தது.

முதல் நட்சத்திரமாக அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை கண்டிருப்பார்கள். மீதமுள்ள ஐந்து நட்சத்திரமும் ஐந்து கலீஃபாக்கள் ஆவார்கள்.

எவ்வாறிருப்பினும் அவர்கள் கூறுகின்றார்கள். MTA மூலமாக ஜமாஅத் பற்றி தெரிய வந்த போது மேலும் அதிகமாக இது பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. MTA பார்த்துக் கொண்டிக்கும் போதே எனது உள்ளத்தில் இமாம் மஹ்தி (அலை) அவர்கள் மீதான அன்பு உருவாகி அதிகரிக்கத் தொடங்கியது. அன்னாரே காலத்தின் இமாமாவார்கள் என்பது எனக்கு மிகவும் உறுதியாகி விட்டது. இதே தருணத்தில் நான் MTA –ல் அல்ஹிவாருல் முபாஷிர் நிகழ்ச்சியில், இமாம் மஹ்தியின் உண்மையை அறிய விரும்புபவர்கள் இஸ்திஹாரா செய்து அல்லாஹ்விடம் வழிகாட்டலை கேட்க வேண்டும் என்று கூறிப்பட்டதை கேட்டேன். எனவே இதில் கூறப்பட்டதற்கிணங்க இரண்டு ரக்அத்துகள் தொழுது பிறகு தூங்கி விட்டேன். அன்று இரவே நான் கனவில் கண்டேன். நான் மக்காவில் மக்கள் ஒன்று கூடியிருக்கின்ற ஒரு பெரிய மைதானத்தில் அங்கு மக்கள் கால் விரல்களில் நின்று கொண்டு தலையை உயர்த்தியவாறு ஒரு நபரை பார்ப்பதற்கு முயற்சி செய்கின்றார்கள். அப்போது ஒரு நபர், மக்களே! உங்களது இமாம் வந்து விட்டார். மக்களே! இமாம் மஹ்தி வந்து விட்டார் என்று உரத்த குரலில் கூறுகின்றார். நானும் பார்க்க ஆரம்பித்து விடுகின்றேன்.

அப்போது அங்கு இமாம் மஹ்தி (அலை) அவர்கள் ஒரு உயர்ந்த இடத்தல் அனைவரது முன்பாகவும் தோன்றுகின்றார்கள். அவர்களது முகம் ஒளிவீசக்கூடிய சந்திரனைப் போன்று பிரகாசிக்கின்றது. கண்களில் துக்கம் தென்பட்டது. நான் மிகவும் கூர்மையாக அவர்களது முகத்தை பார்த்த போது MTA –வில் பார்த்த அதே இமாம் மஹ்தி மற்றும் மஸீஹ் மவ்வூதின் முகமாக அது இருந்தது. இதைப் பார்த்ததும் எனது கண்களிலிருந்து கண்ணீர் வந்தது. மேலும் நான் கடுமையாக அழுகின்றேன். நான் இந்த கனவை கண்ட போது எனது கணவர் விழிந்திருந்தார். அதாவது இந்த பெண்மணி தூங்கிக் கொண்டிருந்த நிலையில் கனவு பார்த்த சமயத்தில் அவரது கணவர் விழித்திருந்தார். அவர் அருகில் தான் இருந்தார். அவர் என்னை எழுப்பி, நீ மிகுந்த வேதனையுடன் ஏன் அழுது கொண்டிருந்தாய் என்று கூறினார். நான் விழித்தபோது எனது கண்கள் கண்ணீரால் நிரம்பியிருந்தது.

அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த கனவிற்குப் பிறகு உண்மை இது தான் என்றும், இந்த நபர் தான் இமாம் மஹ்தி என்றும் எனக்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. எனவே நான் இந்த இமாம் மஹ்தியிடம் பைஅத் செய்ய முடிவு செய்தேன்.

இவர்கள் யமன் நாட்டைச் சேர்ந்த பெண்மணி ஆவார்கள். அனைவரும் இன்றைய யமன் நாட்டின் நிலையை நன்கு அறிந்திருக்கிறார்கள். அண்டை நாடான சவூதி அரேபியா அவர்களின் வான்வழித் தடங்களையும், கடல் வழித் தடத்தையும் அடைத்து விட்டது. எல்லா விதமான உதவிகளும் சென்றடை –வதற்கும் கூட தடைகள் ஏற்படுத்தப்படுகின்றது. அங்கு அப்பாவிப் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் உணவின்றியும், மருத்துவ வசதி இன்றியும் மரணித்துக் கொண்டிருக்கின்றார்கள். முஸ்லிம்கள் முஸ்லிம்களையே கொலை செய்கின்றனர். இவர்கள் வரக்கூடிய மஸீஹை ஏற்காதது தான் இதற்கான காரணமாகும். இவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் இவர்களது நிலைமையை எளிதாக்குவானாக. மேலும் இவர்கள் சுதந்தரமான காற்றை சுவாசிக்கக் கூடியவர்களாக ஆவார்களாக. அல்லாஹ் இவர்கள் மீது கருணை காட்டுவானாக.

சில நல்லுள்ளம் கொண்ட மக்கள் உள்ளத்தால் அஹ்மதிய்யத்தை உண்மை என்று ஏற்றுக் கொண்ட பிறகும் சில காரணங்களினால் அவர்கள் பைஅத் செய்வதில்லை. அல்லாஹ் அவர்களுக்கு எவ்வாறு பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைவதற்காக கவனமூட்டுகின்றான் என்பது தொடர்பாக மாலி நாட்டின் காயி ரீஜியனிலுள்ள முஅல்லிம் சாஹிப் எழுதுகின்றார்கள்.

அப்துல் ஹய் ஜாபி சாஹிப் அவர்களது நெருங்கிய நண்பர் ஒருவர் ரமலான் மாதத்தின் இறுதி பத்தில் திடீரென வஃபாத்தாகி விட்டார். அவர் ஒரு நாள் கனவில் பார்க்கின்றார். மரணமடைந்த தனது நண்பருடன் ஒரு பஸ்ஸில் அவர் பயணம் செய்து கொண்டிருக்கின்றார். அவருடைய நண்பர் அவரிடம் கூறுகின்றார். நீங்கள் எந்த ஜமாஅத்தில் இணைகின்றீர்களோ அது உண்மையான ஜமாஅத் ஆகும். நானும் இதே ஜமாஅத்தில் இணைகின்றேன். அப்துல் ஹய் ஜாபி சாஹிப் தொடர்ச்சியாக நமது ஜமாஅத் ரேடியோ

நிகழ்ச்சிகளை கேட்கக் கூடியவர் ஆவார். அவர் உள்ளத்தால் அஹ்மதி ஆவார். ஆனால் இப்போது வரை அவர் பைஅத் செய்யவில்லை. ஆனால் இந்த கனவிற்குப் பிறகு போன் செய்து, நான் காயி நகரத்திலிருந்து வெகு தொலைவில் இருக்கின்றேன். உங்களது ரேடியோ நிகழ்ச்சியை கேட்கின்றேன். தப்லீக்கை கேட்கின்றேன். நான் இவ்வாறு கனவு கண்டேன். என்னுடைய பைஅத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். நான் இன்றிலிருந்து அஹ்மதி ஆவேன் என்று கூறினார்.

பிறகு எகிப்தின் ஒரு நண்பர் முஹம்மது சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் 9 வயதிலிருந்து கனவில் கம்பீரமான ஒரு குரலை கேட்கின்றேன். அதில் சில வரிகள் எனது காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அதை என்னால் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் அதைக் கேட்டு நான் அச்சமடைவேன். பிறகு 2010 ல் MTA Al-Arabia உடன் எனது தொடர்பு ஏற்பட்டது. அதில் ஷரீஃப் ஓதா சாஹிப் மற்றும் மூஸா ஓதா சாஹிப் அவர்களது குரலில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது சில மேற்கோள்களை கேட்டவுடன் நான் 9 வயதிலிருந்து கனவில் கேட்ட அந்த குரல் இது தான் என்பதை புரிந்து கொண்டேன். இதற்குப் பிறகு MTA நிகழ்ச்சிகளை மிகவும் ஆர்வத்துடன் பார்க்க ஆரம்பித்தேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுகள் மற்றும் அன்னார் எழுதிய கஸீதாக்கள் எனது உள்ளத்தில் மிக ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முகத்தை பார்க்க எண்ணினால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முகம் என் முன்னால் வந்து விடுகிறது.

ஒருநாள் நான் MTA பார்த்துக் கொண்டிருந்–தேன். அதோடு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது புகைப்படமும் வந்தது. அப்போது நான் அந்த புகைப்படத்தை பார்த்து, நீங்கள் உங்களது வாதத்தில் உண்மையாளரா? இல்லையா? என்பதை இறைவன் மீது ஆணையாக நீங்களே எனக்கு கூறுங்கள் என்று கூறினேன். கூறுகிறார்கள். இதற்குப் பிறகு நான் வேலைக்கு சென்று விட்டேன். மாலையில் வீட்டிற்கு திரும்பிய உடனேயே MTA போட்டதும் அதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது ஒரு மேற்கோள் படித்துக் காட்டப்பட்டுக் கொண்டிருந்தது.

யா கவ்மி இன்னி மினல்லாஹி; இன்னி மினல்லாஹ்; இன்னி மினல்லாஹ். உர்ஷிது ரப்பி அன்னி மினல்லாஹ். அதாவது என்னுடைய சமுதாயமே! நான் இறைவன் புறமிருந்து வந்துள்ளேன். நான் இறைவன் புறமிருந்து வந்துள்ளேன். நான் இறைவன் புறமிருந்து வந்துள்ளேன். மேலும் நான் எனது இறைவனை சாட்சியாக வைத்து கூறுகின்றேன். நான் இறைவன் புறமிருந்து வந்துள்ளேன்.

அவர்கள் கூறுகிறார்கள்: நான் இதைக் கேட்ட உடனேயே முழுங்கால்களில் விழுந்து விட்டேன். மேலும் என்னை அறியாமலேயே T.V –யில் காட்சியளித்த ஹுஸூர் (அலை) அவர்களது புகைப்படத்தை முத்தமிட்டவாறு அலைக்கஸ் ஸலாம்; அலைக்கஸ் ஸலாம் என்று கூறினேன். அந்த ஒரு நொடியில் எனக்கு எல்லாமே அஹ்மதிய்யத்தாகி விட்டது. பிறகு அவர் பைஅத் செய்தார்.

பிறகு ஜோர்டனைச் சார்ந்த ஒரு நண்பர் ஜலீல் சாஹிப் அவர்கள் தான் பைஅத் செய்தது தொடர்பாக கூறுகின்றார்கள்: 1992 –ல் இஸ்லாமிய சமுதாயத்திற்கு அதிகமான கஷ்டங்களையும், துன்பங்களையும் எதிர்கொள்ள வேண்டிய –திருந்தது. நான் இரவு பகலாக சிறந்த சமுயாத்துடன் இது என்ன நடந்து கொண்டிருக் –கிறது? என்று யோசித்துக் கொண்டே இருந்தேன். வியக்கத்தக்க விஷயம் என்ன –வென்றால் சிறந்த சமுதாயமாக இருந்த போதிலும் இந்த சமுதாயம் பிரிவினைக்கு உள்ளாகி இருக்கின்றது. மேலும் தங்களுக் –கிடையில் சண்டையிடுகின்றார்கள்.

எனக்குள்ளேயே தற்போது தென்படுவது போன்ற மார்க்கம் நமது மார்க்கம் அல்ல என்ற ஓசை எழுந்தது. நிச்சயமாக ஏதோவொரு விஷயத்தை விட்டு விட்டு நமது சமுதாயம் கவனமற்றதாக இருக்கிறது என்று எனக்கு தோன்றியது.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஒரு நாள் வழியில் தனியாக நின்று கொண்டிருக்கின்றேன். அது நேரானதாகவும், நல்ல சாலையாகவும் இருக்கின்றது. அப்போது ஒரு மார்டன் மெர்சிட்டீஸ் கார் வருகிறது. அதில் டிரைவர் அருகிலுள்ள சீட்டில் ஒரு நபர் அமர்ந்துள்ளார். காரை ஓட்டும்படி என்னிடம் அவர் கூறுகின்றார். நான் டிரைவர் சீட்டில் அமர்ந்து கொண்டேன். எனது உள்ளத்தில் நான் இமாம் மஹ்தி (அலை) அவர்களுடன் அமர்ந்திருப்பதாக இடப்பட்டது. நான் பயப்படுவது போன்ற நிலை ஏற்பட்டது. கார் செல்ல ஆரம்பித்தது. அப்போது வழியில் கருப்பு நிறத்தை உடைய முகம் கொண்ட சிலர் தோன்றினர். அவர்கள் வழியின் இரண்டு புறமும் வரிசையாக நிற்க ஆரம்பித்தார்கள். மேலும் அவர்களிடம் சிறிய வகையிலான ஆயுதமும் இருந்தது. பிறகு அவர்கள் எங்களை சுட ஆரம்பித்தனர். ஆனால் எங்கள் மீது எந்த குண்டும் படவில்லை. நாங்கள் மிகவும் பாதுகாப்பாக எங்களது இடத்தை அடைந்தோம்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் கனவிலேயே காரை நிறுத்துகின்றேன். அப்போது இமாம் மஹ்தி (அலை) அவர்கள், கீழே இறங்குங்கள். காரின் டிக்கியை திறங்கள் என்று கூறுகின்றார்கள். நான் கீழே இறங்கி டிக்கியை திறந்த போது மரத்தினால் ஆன ஓர் அழகிய பெட்டி இருக்கின்றது. அதில் ஐந்து வயது குழந்தை ஒன்றும் இருக்கின்றது. அந்த குழந்தை மிகவும் அழகாக இருக்கின்றது. அது என்னை பார்த்தது.

பிறகு நான் விழித்த போது கண்ட கனவினால் மிகவும் மகிழச்சியடைந்தேன். மேலும் இது நிச்சயமாக இறைவன் புறமிருந்து வந்த ஒரு தூதுச் செய்தியாகும் என்று உள்ளத்தில் எண்ணினேன். நான் இதற்கு இவ்வாறு விளக்கம் அளித்தேன். அதாவது புதிய வாகனம் என்பது வாழ்க்கையின் புதிய பயணம் ஆகும். தாக்குதல் நடத்துகின்ற கருப்பு முகமுடைய மக்கள் என்பது இந்த புதிய வாழ்க்கையை எதிர்க்கின்ற மக்களின் ஏச்சுப் பேச்சுக்கள் மற்றும் செயல்களாகும். அதன் மூலம் எந்த தாக்கமும் ஏற்படாது. அழகிய பெட்டிகளில் இரசியங்கள் பாதுகாக்கப்படு –கின்றது. ஐந்து வயது குழந்தை என்பது சில நற்செய்திகளாகும். அது ஐந்து வருட காலக்கட்டத்தில் நிறைவேறும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: வியக்கத்தக்க விஷயம் என்னவென்றால், கனவின் விளக்கமாக நான் புரிந்தது எவ்வாறு வெளிப்பட்டது என்றால், அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றி தெரிந்து கொண்ட பிறகு எனது வாழ்க்கையின் புதிய பயணம் ஆரம்பமானது. மேலும் ஐந்தாவது கிலாஃபத் காலகட்டத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்தை ஏற்றுக் கொள்வதற்கான நற்பாக்கியம் எனக்கு கிடைத்தது. கூறுகின்றார்கள். எனது ஊரில் நான் மட்டுமே தனியாக ஜமாஅத்தில் இணைந்திருந்தேன். நான் இமாம் மஹ்தியின் வருகை தொடர்பாக ஊரில் அறிவிப்பு செய்த போது நம்மவர்கள் கூட எனது எதிரியாகி விட்டார்கள். பள்ளிவாசலில் எனக்கு எதிராக குஃப்ர் ஃபத்வா வழங்கப்பட்டது. இந்த பயணத்தை நிறைவு செய்வதற்காக எனக்கு ஒரு உதவியாளரை வழங்குவாயாக என்று நான் இறைவனிடம் துஆ செய்தேன். பிறகு இறைவன் எனக்கு எப்படிப்பட்ட உண்மையான மற்றும் நல்ல உதவியாளர்களை வழங்கினான் என்றால் அவர்கள் யார் என்றே எனக்குத் தெரியாது. மேலும் அவர்களே எனது உண்மையான அன்பிற்கு உரியவர்களாகவும், நெருக்கமானவர்களாகவும் திகழ்ந்தார்கள்.

சிரியாவைச் சார்ந்த முஹம்மது அப்துல்லாஹ் சாஹிப் என்ற ஒரு நண்பர் அவர் தற்போது கனடாவில் இருக்கின்றார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: நான் Sales Man ஆக இருந்தேன். எனது வாடிக்கையாளர் ஒருவரின் மகனோடு எனக்கு தொடர்பு ஏற்பட்டது. அவர் இளைஞர் அஹ்மதி ஆவார். அவருடனான தொடர்பு அதிகமானது. அவர் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அடிப்படையான கொள்கை மற்றும் அதன் புதிய விளக்கங்கள் பற்றி எடுத்துக் கூறினார். அவர் எனக்கு இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் என்ற நூலின் அரபி மொழியாக்கத்தை வழங்கினார். நான் இந்த புத்தகத்தை படித்து மிகுந்த தாக்கத்திற்கு உள்ளானேன். மேலும் அதில் கூறப்பட்டுள்ள அறிவு சார்ந்த விஷயங்கள் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அதற்குப் பிறகு நான் ஒரு வருட காலம் வரை ஜமாஅத்தின் பல்வேறு நூல்களை படித்தேன். மேலும் MTA Al-Arabia நிகழ்ச்சியும் பார்க்க ஆரம்பித்தேன். ஒரு வருடம் புத்தங்களை படித்து, MTA Al-Arabia நிகழ்ச்சிகளை பார்த்து, மேலும் ஜமாஅத்தின் கொள்கைகள் பற்றிய விஷயங்களை ஒப்பீடு செய்து பார்த்த பிறகு என்னுடைய உள்ளத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைவதற்கான ஆர்வம் ஏற்பட்டது. ஆனால் நான் என்னுடைய அகத்தூய்மையின்மையின் காரணமாக என்னை இந்த தூய ஜமாஅத்தில் இணைப்பதற்கு தகுதியானவனாக கருதவில்லை. மேலும் அந்த அந்தஸ்த்தை அடைவதற்கான வழியையும் நான் அறிந்திருக்கவில்லை. எனவே நான் எனது அந்த நண்பரிடம், எனக்கு சில அஹ்மதிளோடு தொடர்பை ஏற்படுத்திக் கொடுக்க கூறினேன். அவர் தனது வீட்டிலேயே அஹ்மதிகளை சந்திப்பதற்கான ஏற்பாடுகளை செய்தார். அதில் ஒரு நண்பரோடு இருந்ததனால், ஆன்மீகத்தை அடைவதற்கான வழிகள் தொடர்பாக அவர் பேசியதை நான் எவ்வாறு உணர்ந்தேன் என்றால் அதன் மூலமாக எனது ஆன்மீக தாகம் தணிந்ததைப் போன்று இருந்தது. நான் கண்ட

கனவினால், நிச்சயமாக என்னை அல்லாஹ் ஒரு போதும் வீணாக்கி விட மாட்டான். நிச்சயமாக எனக்கு நேர்வழியை வழங்குவான் என்ற நிச்சய உறுதி இருந்தது. இந்த எண்ணத்துடன் நான் இஸ்திஹாரா செய்ய ஆரம்பித்து விட்டேன்.

நான் எனது வேலை நிமித்தமாக டெமாஸ்கஸில் இருந்தேன். எனது மனைவி ஹலபில் குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களுடன் வசித்து வந்தாள். நான் இஸ்திஹாரா செய்ய ஆரம்பித்த உடன் எனது மனைவியிடம், இந்த காலகட்டத்தில் ஏதேனும் கனவு கண்டால் நிச்சயம் என்னிடம் கூறவும் என்று போன் செய்து கூறினேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: சில நாட்களுக்குப் பிறகு வந்த அந்த ஓர் இரவு எனக்கு லைலத்துல் கத்ராக நிரூபணமானது. அதில் நான் ஒரு மிகவும் மகத்தான கனவை கண்டேன். நான் ஒரு நேர்மையான உறவினரை கனவில் கண்டேன். அவர் ஒரு கடிதத்தை எனக்கு வழங்கியவாறு இது முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தரப்பிலிருந்து வழங்கப்பட்டதாகும் என்று கூறினார். நான் அதை மிகுந்த ஆர்வத்துடன் திறந்தேன். அதில் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வ பரக்காத்துஹூ என்று எழுதப்பட்டிருந்தது. நான் கண் விழித்த போது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தேன். மேலும் எனது நாவுகளில் இந்த வசனம் ஓதப்பட்டுக் கொண்டிருந்தது.

உதுஹுலூஹா பி ஸலாமின் ஆமீனின் அதாவது, இதில் சாந்தியுடன் எவ்வித அச்சமும் இன்றி நுழைவீராக.

அவர்கள் கூறுகின்றார்கள்: இது ஜமாஅத்தில் இணைவதற்கான ஒரு வெளிப்படையான தூதுச் செய்தியாக இந்த கனவு இருந்தது. இந்த கனவானது வரக்கூடிய இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஸலாத்தை எட்ட வைப்பதற்கான தூதுச் செய்தியின் பக்கமும் சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தது. ஆனால் அப்போது எனக்கு இதற்கான அறிவு இருக்கவில்லை. எவ்வாறிருப்பினும் இது எனது இஸ்திஹாராவிற்கான பதிலாகும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. எனவே இதன் விளைவாக நான் பைஅத்தும் செய்து விட்டேன்.

பிறகு சிரியாவைச் சார்ந்த ஒரு பெண்மணி தனது பைஅத் தொடர்பாக கூறியவாறு கூறுகின்றார்கள்: அஹ்மதிய்யத் பற்றி அறிவதற்கு முன்னரே நானும் எனது சகோதரியும் ஒரு ஜமாஅத்தை உண்மை என்று கருதி அதில் இணைந்தோம். ஆனால் பின்னர் தான் ஷரீஅத்தின் பெயரில் இந்த ஜமாஅத் புதிய ஒரு ஷரீஅத்தை உருவாக்கி இருந்தது தெரிய வந்தது. இதற்குப் பிறகு நான் இறைவனிடம், இன்று உனது உண்மையான மார்க்கம் எங்கிருக்கிறது? என்பதை கூறு என்றும் இன்று உனது உதவி ஒத்தாசை எந்த ஜமாஅத்துடன் இருக்கிறது? என்று அழுதழுது துஆ செய்து கேட்டேன்.

பல நாட்கள் வரை இந்த துஆ செய்த பிறகு ஒரு நாள் ஒரு மகத்தான ஒளி எனது உடலில் நுழைந்தது போன்று நான் உணர்ந்தேன். இந்த நிலையைக் கண்டு நான் எனது துஆவை மேலும் அதிகப்படுத்தினேன். அதிகமாக அழுததன் காரணமாக தொண்டை அடைத்தது. அப்படிப்பட்ட நிலையில் எனக்கு அருகில் ஒரு நபர் வந்து நிற்பதை நான் பார்க்கின்றேன். இப்படிப்பட்ட நிலையில் அவர் என்னிடம் அனுதாபம் காட்ட வந்துள்ளார் என்று எனக்கு தோன்றியது. நான் அவரைப் பார்த்து எனது உள்ளத்தில் இது யார்? என்று கேட்கின்றேன். ஆனால் அதற்கான எந்த பதிலும் எனக்கு கிடைக்கவில்லை. அடுத்த நாளும் நான் அதிகமாக அழுதேன். எந்த அளவுக்கு என்றால் எனது குரலே அடைத்து விட்டது. பிறகும் அதே நிலை ஏற்பட்டது. நான் அவ்வாறே அந்த நபரை என் அருகில் பார்த்தேன். மூன்றாவது முறையும் அவ்வாறே நடந்தது. அப்போது நான் உரத்த குரலில் இறைவனிடம், இறைவா! இந்த நபர் யார்? என்று நீயே கூறு. மேலும் மீண்டும் மீண்டும் ஏன் காட்சியளிக்கிறார்? என்று கேட்டேன்.

அவர் கூறுகின்றார்: இதற்கான பதில் எனக்கு சிறிது காலத்திற்குப் பிறகு கிடைத்தது. நடந்தது என்னவென்றால், நான் எனது சகோதரி மற்றும் தாயின் சகோதரியுடன் அமர்ந்திருக்கும் போதெல்லாம் பல்வேறு விஷயங்கள் தொடர்பாக பேசுவோம். மேலும் இந்த விஷயம் தொடர்பாகவும் அதாவது இப்போதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வர வேண்டும் என்று பேசுவோம். இன்றைய காலத்தில் T.V –யின் மூலமாக எங்கையாவது மஸீஹ் வந்து விட்டார் என்ற அறிவிப்பு வரும். மேலும் மக்கள் அவர் மீது ஈமான் கொள்வதற்காக ஓடுவர் என்றும் நாங்கள் பேசுவோம். ஆனால் நம்முடைய மவ்லவியோ T.V பார்ப்பதை கூட ஹராமாக்கி விட்டார். சில இடங்களில் அரபு நாட்டில் T.V பார்ப்பது ஹராமாகும் என்று கூட மவ்லவிகள் ஃபத்வா கொடுத்துள்ளனர் என்றும் நாங்கள் பேசிக் கொண்டோம்.

அவர்கள் கூறுகிறார்கள்: T.V பார்க்காமல் இருந்தால் பிறகு இதற்கான அறிவு நமக்கு எவ்வாறு ஏற்படும். நீண்ட சர்ச்சைக்குப் பிறகு நாங்கள் மவ்லவியின் ஃபத்வாவிற்கு எதிராக T.V –ஐ வாங்கிக் கொண்டு வந்து பார்க்க ஆரம்பித்து விட்டோம். அதற்குப் பிறகு நான் ஒரு வியக்கத்தக்க கனவை கண்டேன். அது எனது வாழ்க்கையை மாற்றி விட்டது. நான் ஒரு மிகப் பெரிய மைதானத்தில் இருக்கின்றேன். அப்போது சில மக்களை காரில் வருவதாக பார்க்கின்றேன். அதன் மேல் Satilite Dish பொருத்தப்பட்டுள்ளது. அவர்களுடைய கார் அந்த மைதானத்தின் நடுவில் வந்து நின்று விடுகின்றது. அதிலிருந்த சில மக்கள் பொருள்களை தரையில் வைத்துக் கொண்டே இருக்கின்றார்கள். அவர்களில் ஒருவர் அரபிகளின் ஆடையை அணிந்துள்ளார். மேலும் அவரது முகம் பிரகாசமாக இருக்கிறது. திடீரென்று அந்த நபர் மைதானத்தின் அருகிலிருந்து வந்து என் முன்னால் நிற்கின்றார். அவர் என்னிடம் சகோதரியே நீங்கள் இங்கே என்ன செய்கின்றீர்கள்? என்று கேட்கின்றார். நான் பதில் கூறுவதற்கு பதிலாக அவரிடம் நீங்கள் இங்கே என்ன செய்கின்றீர்கள்? என்று கேட்கின்றேன். அதற்கு அவர் நாங்கள் புதிய T.V Channel -ஐ ஆரம்பிக்க இருக்கின்றோம். நீ அதைப் பார்ப்பாயா? என்று கேட்கிறார். நான் ஏன் பார்க்க மாட்டோம். நான் கண்டிப்பாக பார்ப்பேன் என்று கூறுகின்றேன்.

இதற்குப் பிறகு எனது கண்கள் திறந்தன. அடுத்த நாள் நான் T.V –ஐ கொண்டு வந்தேன். சிறிது நேரத்திலேயே அனைத்தையும் செட் செய்து விட்டேன். ஒவ்வொரு சேனலாக பல்வேறு சேனல்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது ஒரு சேனல் இவை அனைத்தையும் விட வித்தியாசமானதாக இருந்தது. மேலும் அது ஏதோவொரு காலத்தினுடைய சேனலைப் போன்று இருந்தது. இதன் காரணமாகவே மற்ற சேனல்களை விட்டு விட்டு நாங்கள் இந்த சேனலை பார்க்க ஆரம்பித்தோம். அந்த சேனல் MTA ஆகும்.

அப்போது அந்த சேனலில் அல் ஹிவாருல் முபாஷிர் நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்த போது நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்தவரின் பக்கம் எனது பார்வை சென்று கொண்டே இருந்தது. மேலும் நான் இவரை எங்கேயோ கண்டுள்ளேன் என்ற எண்ணம் என்னுள் ஓடிக் கொண்டே இருந்தது. அப்போது திடீரென்று எனக்கு நினைவிற்கு வந்தது. அதாவது இந்த மனிதரைத் தான் நான் கனவில் பரந்து விரிந்த மைதானத்தில் Satillite Channel -ஐ துவக்கியதாக கண்டேன். மேலும் கனவிலேயே அவரிடம் இந்த சேனலை பார்ப்பதாகவும் வாக்குறுதி அளித்தேன். எனது வாக்குறுதியை நினைவு கூர்ந்து நான் இந்த சேனலைப் பார்க்க ஆரம்பித்து விட்டேன். பிறகு இந்த சேனலையே நான் பார்ப்பவளாக ஆகி விட்டேன்.

வழக்கத்திற்கேற்ப ஒரு நாள் நான் அவர்களுடைய நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டிருந்தேன். அதில் இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் பற்றிய விஷயங்களை கேட்டு கவனத்துடன் அதைப் பார்த்தேன். அப்போது திரையில் ஒரு புகைப்படம் தென்பட்டது. அதன் கீழ் இமாம் மஹ்தி, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று எழுதப்பட்டிருந்தது. எனக்கு ஆர்வம் அதிகமானது. அப்போது இமாம் மஹ்தியின் ஒரு கூற்று போடப்பட்டது. முதல் மேற்கோளின் முதல் கூற்றே எனது வாழ்க்கையை தலை கீழாக மாற்றுவதற்கு போதுமானதாக நிரூபணமானது. அது என்னவென்றால்,

வ வல்லாஹி இன்னி மினல்லாஹி ஆதைது வமஃப் தரைத்து வகத் காப மனிஃப் தரா. அதாவது இறைவன் மீது ஆணையாக! நான் இறைவன் புறமிருந்து வந்துள்ளேனே தவிர நான் எவ்வித பொய்யும் உரைக்கவில்லை. நிச்சயமாக பொய்யுரைப்பவர் தோல்வியையே அடைகின்றார்.

இந்த கூற்றை கேட்டதுமே நான் என்னை அறியாமலேயே, இது ஒரு உண்மையாளரின் கூற்றாகும். நிச்சயமாக இந்த நபர் தனது வாதத்தில் உண்மையாளர் ஆவார். மேலும் இவரே இமாம் மஹ்தியும், வாக்களிக்கப்பட்ட மஸீஹும் ஆவார் என்று கூறினேன்.

இந்த மேற்கோளின் இடையில் மீண்டும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் புகைப்படம் காட்டப்பட்ட போது நான் உறைந்து அமர்ந்து விட்டேன். ஏனென்றால் நான் கனவில் கண்டது இந்த நபரைத்தான். நான் இறைவனிடம் அழுதழுது, இறைவா! இன்று உனது உண்மையான மார்க்கம் எங்கே இருக்கிறது? என்றும் இன்று

உனது உதவி ஒத்தாசை எந்த ஜமாஅத்தோடு இருக்கிறது என்றும் கேட்ட போது இந்த நபர் தான் அந்த சமயத்தில் என்மீது அனுதாபம் காட்டுவதற்காக வந்தார். மேலும் அவரைப் பார்த்து நான் இந்த நபர் யாரென்று தெரியவில்லை என்று எனது உள்ளத்தில் கூறினேன். இப்போது T.V –யில் அதே புகைப்படத்தை பார்த்து எனது கனவு மற்றும் அதன் விளக்கம் வெளிப்பட்டு விட்டது. இறைவன் அந்த நேரத்தில் என்னிடம் இந்த நபர் தான் இவரது ஜமாஅத்துடன் தான் இறைவனது உதவி இருக்கின்றது என்றும் இந்த ஜமாஅத் தான் இறைவனது உண்மையான மார்க்கத்தின் உண்மையான பிரதிநிதித்துவம் உடையதாக இருக்கிறது என்றும் என்னிடம் கூறினான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அழுதவாறு இந்த புகைப்படத்பைத பார்த்து, இன்று நீர் தான் இஸ்லாத்தை பாதுகாக்கின்றீர். நீரே சிலுவை கொள்கைக்கு மறுப்பு தெரிவிக்கின்றீர். நீரே உண்மையான வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி ஆவீர். நான் உம்மை உண்மைப்படுத்து –கின்றேன். மேலும் உம்மிடம் பைஅத் செய்கின்றேன். எனக்கு அப்போது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மஹ்தியிடம் பைஅத் செய்வது அவசியம் என்பது எனக்குத் தெரியாது என்று கூறினேன்.

நான் எனது நெருக்கமானவர்களுக்கு இந்த சேனல் பற்றி கூறினேன். பெரும்பான்மை –யானவர்கள் எனது பேச்சிற்கு முக்கியத்தும் கொடுக்கவில்லை. ஆனால் எனது சகோதரியும், தாயின் சகோதரியும் பல முறை MTA பார்த்த பிறகு பைஅத் செய்வதற்கு முடிவு செய்தார்கள். பிறகு எனது தாய், சகோதர் மற்றும் மற்ற இரு சகோதரிகளும் பைஅத் செய்து விட்டனர். இவர்களுடைய பெயர் அனல் இஜான் சாஹிபா ஆகும்.

பிறகு எகிப்தைச் சார்ந்த ஒரு நண்பர் சயீத் சாஹிப் கூறுகின்றார்கள்: அஹ்மத்திய்யத்தோடு தொடர்பு ஏற்படுவதற்கு சில காலங்களுக்கு முன்பு கனவில் நான் ஒரு பரந்து விரிந்த மைதானத்தல் என்னை பார்த்தேன். அங்கு மிகவும் அழகான ஒரு கூடாரம் அமைக்கப்பட்டிருந்தது. அதற்கான பாதுகாப்பில் பலர் ஈடுபட்டிருந்தனர். அந்த பாதுகாவலர்களில் ஒருவர் என்னிடம் நீங்கள் இங்கே எவ்வாறு வந்தீர்கள் என்று கேட்டார். அதற்கு நான் எனக்கு தெரியாது. ஆனால் நீங்கள் இந்த கூடாரத்தில் யார் இருக்கின்றார் என்று நீங்கள் கூறுங்கள் என்று கூறினேன். பாதுகாவலர், இந்த கூடாரத்தில் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இருக்கின்றார்கள் என்று கூறினார். இதைக் கேட்டு எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. அத்துடன் எனக்கு அச்சமும் ஏற்பட்டது. ஏனென்றால் ஹுஸூர் (ஸல்) அவர்கள் இருக்கின்ற இந்த மகத்தான இடத்திற்கு எவ்வாறு வந்து சேர்ந்தேன் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்படவில்லை.

அப்போதே நபி (ஸல்) அவர்களுடைய அழகிய மற்றும் உள்ளத்தை கவரக்கூடிய குரலின் ஓசை கேட்டது. நீங்கள் எனக்கு கண்ணியம் வழங்கு –கிறீர்கள்தான். ஆனால் நீங்கள் ஏன் ஷேமாவை விட்டு விட்டு வந்தீர்கள்? அவள் வருகிறாள். நீங்கள் தயாராகுங்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள். அப்போது கூடாரத்தின் கதவு திறக்கின்றது. நபி (ஸல்) அவர்கள் வான நிற அதாவது இளநீல நிற போர்வையை அணிந்தவாறு வெளியில் வருகின்றார்கள். மறுபுறத்திலிருந்து ஷேமா என்ற பெயரையுடைய ஒரு குழந்தையும் பள்ளிக்கூட ஆடையை அணிந்தவாறு வருகின்றாள். அப்போது பாதுகாவலர்கள் இரண்டு புறமும் வரிசையாக நின்று கொண்டு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும், ஷேமா என்ற பெயரையுடைய அந்த குழந்தையையும் வரவேற்கின்றார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அந்த சமயம் வரை கனவின் மீது நம்பிக்கை வைத்ததில்லை. ஷேமா என்ற பெயரையுடைய ஒரு குழந்தை கனவில் வருவது என்பது எனது இந்த எண்ணத்தை வலுப்படுத்தக் கூடியதாக இருந்தது. அதாவது இது வீணான கனவாகும். வெறுமனே கனவு வந்துள்ளது என்று கருதுகிறேன். ஆனால், பிறகு வந்த ஒரு கனவு இந்த கனவை உண்மைப்படுத்தக்கூடியதாக இருந்தது.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இந்த கனவின் பக்கம் கவனம் செலுத்தவில்லை. வேறு எவரிடமும் இந்த கனவைப் பற்றியும் எடுத்துக் கூறவில்லை. ஏனென்றால் கனவின் மீது நம்பிக்கையும் இல்லாமல் இருந்தது. குழந்தை கனவில் வருவது போன்ற கனவுகள் தவறான கனவாகும் என்பதாகவே தோன்றியது. எனவே யாரிடமும் எடுத்துக் கூற வேண்டிய அவசியமும் இருக்கவில்லை. ஆனால் சில நாட்களே கழிந்திருந்தன. நான் இன்னொரு கனவு கண்டேன். இந்த கனவானது ஏறக்குறைய முதலில் கண்ட கனவை ஒத்ததாகவே இருந்தது.

நான் கோதுமை நிறத்தையுடைய ஒரு மனிதரைப் பார்த்தேன். நான் இவர் யார் என்று கேட்டேன். அதற்கு இவர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஆவார்கள் என்று கூறப்பட்டது. அன்னார் சிறிது நேரத்திற்குப் பிறகு வஃபாத்தாகி விட்டார்கள். மேலும் அடக்கம் செய்யப்பட்டு விட்டார்கள். வெள்ளி நாணயங்களின் குவியலில் இருந்து வாளி வாளியாக நிரப்பி அன்னாரது கபரில் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் எப்போதும் போன்றே இந்த கனவிற்கும் எவ்வித முக்கியத்துவமும் கொடுக்கவில்லை. ஏனென்றால் கனவில் நம்பிக்கை இருக்கவில்லை. இதைப் பற்றியும் எவருக்கும் கூறவில்லை.

ஆனால் இந்த இரண்டு கனவுகளும் ஒரு விஷயத்தை பற்றி என்னை சிந்திக்க வைத்து விட்டது. அது என்னவென்றால், நான் இரண்டு கனவுகளிலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்தேன். ஆனால் இரண்டு கனவிலும் பார்த்த மனிதர்கள் வெவ்வேறு நபர்களாவர். நான் பல முறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முகம் ஒன்றே ஆகும். நான் கண்ட கனவு உண்மை என்றால் பிறகு ஒவ்வொரு கனவிலும் அன்னாரது தோற்றம் எவ்வாறு வெவ்வேறாக இருக்க முடியும் என்று சிந்தித்துள்ளேன்.

அவர்கள் கூறுகின்றார்கள். சில நாட்களுக்குப் பிறகு நான் ஒரு புக் ஷாப்பில் இருந்தேன். அங்கு பணி செய்து கொண்டிருந்தேன். புத்தகத்தை துடைப்பதற்கான பணியைச் செய்து கொண்டிருந்தேன். பழைய பத்திரிகைகள் மற்றும் நூல்களின் தொகுப்புகளை ஒன்றன் பின் ஒன்றாக வைத்துக் கொண்டிருந்தேன். ஒரு பத்திரிகையில் வந்த புகைப்படத்தை பார்த்து நான் அதிர்ந்து போனேன். அது ஒரு குழந்தையின் புகைப்படம் ஆகும். அதுவொரு சாதாரண குழந்தையல்ல. மாறாக, நான் சில நாட்களுக்கு முன்பு கனவில் கண்ட ஷேமா என்ற பெயரையுடைய குழந்தையின் புகைப்படமாகும். படிப்பறிவு இல்லாததன் காரணமாக எனது சில நண்பர்களிடம் இந்த புகைப்படம் பற்றிய கதையை கேட்டேன். அப்போது இந்த குழந்தை சில நாட்களுக்கு முன்பு தீவிரவாதிகளின் கைகளினால் கொலை செய்யப்பட்டு விட்டாள் என்பது தெரிய வந்தது. நான் படிப்பறிவற்றவளாக இருந்தேன். T.V அல்லது பத்திரிகையோடு எனக்கு எந்த தொடர்பும் கிடையாது. எனவே எனக்கு இந்த சம்பவத்தைப் பற்றிய எந்த அறிவும் கிடையாது. மேலும் இதைப் பற்றி நான் இதற்கு முன்பும் எதவும் கேட்டதும் கிடையாது. ஆனால் ஷேமா படத்தை பார்த்த பிறகு எனது முதல் கனவு உண்மையானது என்பது எனக்கு உறுதியாகி விட்டது. இந்த குழந்தை கனவில் வந்தது நான் கண்ட கனவின் உண்மையை நிரூபிப்பதற்காகவே இருந்தது.

இந்த சம்பவத்திற்குப் பிறகு இதுவும் எனக்கு உறுதியாகி விட்டது. முதல் கனவைப் போன்று இரண்டாவது கனவும் உண்மையானது. ஆனால் முதல் கனவு உண்மையானது என்றால் இரண்டாவது கனவில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தோற்றம் ஏன் மாறுபட்டதாக இருந்தது என்பது எனக்குப் புரியாமலேயே இருந்தது. பல நாட்கள் கழிந்த பிறகு T.V –யில் பல சேனல்களை திருப்பி திருப்பி பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது MTA வந்தது. அப்போது அல்ஹிவாருல் முபாஷிர் நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது மஸீஹின் மரணம் தொடர்பான விஷயங்கள் பேசப்பட்டன. நான் எழுதப் படிக்கத் தெரிந்தவளாக இருக்கவில்லை. மேலும் மார்க்க ரீதியாகவும் எவ்வித அறிவும் கிடையாது. எனவே இவ்விஷயங்களை மிகவும் வியப்புடன் பார்க்க ஆரம்பித்தேன்.

சிறிது நேரத்திற்குப் பிறகு ஷரீஃப் ஒதா சாஹிப் கூறினார். இப்போது நாம் சிறிது இடைவெளி விடுவோம். இந்த இடைவெளியில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் இமாம் மஹ்தி அவர்களின் கஸீதாக்களை கேட்போம். கஸீதாவிற்கு இடையில் ஒரு நபரது புகைப்படமும் காட்டப்பட்டுக் கொண்டிருந்தது. அதை பார்த்து எனது வியப்பிற்கு அளவில்லாமல் இருந்தது. அந்த புகைப்படம் நான் இரண்டாவது கனவில் கண்ட அந்த நபரது புகைப்படமாகும். மேலும் எனக்கு அவரைப் பற்றி இது முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) என்றும் கூறப்பட்டது.

இந்த உண்மை தெளிவான பிறகு யாரிடமும் நான் இதைப்பற்றி பேசவில்லை. எனது மனைவியுடன் அமைதியாக MTA பார்த்து வந்தேன். ஒரு மாதத்திற்குப் பிறகு இந்த ஜமாஅத்தைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய் என்று கேட்டேன். அதற்கு அவர் எனது பார்வையில் இது உண்மையான ஜமாஅத்தாகும் என்று கூறினார்.

இதற்குப் பிறகு நான் எனது கனவின் விளக்கத்தை கூறினேன். அதில் நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைக்

கண்டேன். அவரைப் பற்றி எனக்கு அது நபிகள் நாயகம் (ஸல்) ஆவார்கள் என்று எனக்கு கூறப்பட்டது. ஏனென்றால் அன்னார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மைப் பேரன்பராக திகழ்ந்தார்கள். எனவே சில மக்கள் கனவில் கண்டதன் விளக்கம் இது தான் என்று கூறினர். அதாவது அன்னாரின் வருகை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது இரண்டாவது வருகையாகும். மேலும் இதையே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கூறினார்கள் என்று கூறினர்.

அவர் கூறுகின்றார். இதற்குப் பிறகு நான் 8 மாதங்கள் வரை MTA பார்த்து வந்தோம். ஆனால் அப்போது வரை பைஅத் செய்யவில்லை. ஒரு நாள் எனது மனைவி நீங்கள் பைஅத் செய்ய தயாராக இல்லையா? என்று என்னிடம் கேட்டாள். நான் ஏன் இல்லை என்று கேட்டேன். இரண்டு வாரத்திற்குப் பிறகு எனது மனைவி மீண்டும் என்னிடம் நீங்கள் பைஅத் செய்ய தயாராக இல்லையா? என்று கேட்டாள். அதற்கு நான் அதே பதிலையே அதாவது ஏன் இல்லை. நான் தயாராக இருக்கின்றேன் என்று கூறினேன். அவள் கூறினாள். இப்போது நீங்கள் பைஅத் செய்ய போகவில்லை என்றால் நான் தனியாகவே சென்று விடுவேன். எனவே எனது மனைவியின் இந்த உறுதியான நிலைப்பாற்றிற்குப் பிறகு நான் ஜமாஅத் மக்களோடு தொடர்பு கொண்டேன். மேலும் நாங்கள் இருவரும் பைஅத் படிவத்தை நிரப்பி விட்டோம்.

சில நேரங்களில் பெண்கள் கூட ஆண்களுக்கு தைரியமூட்டுவதற்கும் நேர்வழிக்கும் காரணியாக அமைந்து விடுகின்றனர்.

ஐவெரிகோஸ்ட்டிலுள்ள நமது முபல்லிக் பாஸித் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: குசாலி என்ற இடத்திலுள்ள மக்கள் எங்களது இடத்திலும் தப்லீக் செய்ய வேண்டும் என்று வேண்டினர். அடுத்த நாள் ஒரு குழு அங்கு சென்றடைந்தது. இஷா தொழுகைக்குப் பிறகு தப்லீக் நிகழ்ச்சி ஆரம்பமானது. இரவு 10 மணி வரை தப்லீக் நிகழ்ச்சி நடைபெற்றது. மேலும் கேள்வி பதில் நிகழ்ச்சி 3 மணி வரை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் முஸ்லிம்கள், கிறித்தவர்கள், இணை வைப்பவர்கள் என ஒரு பெரும் கூட்டம் கலந்து கொண்டது. ஆப்ரிக்கர்கள் வெறுமனே ஏற்றுக் கொள்ளக் கூடியவர்கள் என்று மக்கள் கருதுகின்றனர். 5, 6 மணி நேரம் இந்நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது. மேலும் அவர்கள் கேள்வியும் கேட்கின்றார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஊரின் Cheif மதிப்பிற்குரிய ஜமான்தே அவர்களும் முழு நேரமும் தப்லீக் நிகழ்ச்சியை கேட்டார்கள். இதன் விளைவாக அல்லாஹ்வின் அருளால் அப்போது 160 பேர் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தனர்.

அவர்கள் கூறுகின்றார்கள்: காலையில் 8.00 மணிக்கு நாங்கள் Chief –ஐ சந்திப்பதற்காக அவரது வீட்டிற்குச் சென்றோம். அப்போது ஊரில் புதிதாக பைஅத் செய்தவர்களும் உடன் இருந்தனர். அந்த சந்தர்ப்பத்தில் Chief அவர்கள் 2014 ஆம் ஆண்டு தான் கண்ட ஒரு கனவை கூறினார்.

அவர் கூறுகின்றார்: அவர் தனது வீட்டில் இருப்பதாக பார்க்கின்றார். அப்போது இரண்டு வெள்ளை விமானங்கள் வருகின்றது. ஒன்று ஊருக்கு அருகில் வந்து விட்டு மீண்டும் திரும்பி சென்று விடுகின்றது. மற்றொன்று அவரது வீட்டின் அருகே தரை இறங்குகிறது. மேலும் அவர்கள் ஏணிப்படி மூலமாக மேலே செல்கின்றார். அந்த விமானத்தில் முஸ்லிம்கள் இருக்கின்றார்கள். அவர்கள் அவருக்கு புத்தகங்களை கொடுக்கின்–றார்கள். கீழே வந்து அவர் புத்தகத்தை பார்க்கின்றார். அப்போது அது மிகவும் அழகான தங்கமாக மாறி விடுகின்றது. பாங்கை கேட்டு அவரது கண்கள் திறக்கின்றது.

Chief சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இந்த கனவை பல முஸ்லிம் உலமாவிடம் கூறினேன். ஆனால் எவராலும் அதனுடைய சரியான விளக்கத்தை கூற முடியவில்லை. ஒரு அஹ்மதி அல்லாத மவ்லவி, இந்த கனவில் நீங்கள் தங்கத்தை கண்டுள்ளீர்கள். அது நல்ல சகுனம் கிடையாது. எனவே, நீங்கள் ஒரு கிலோ தங்கத்தை எனக்கு கொடுத்து விடுங்கள். இல்லையென்றால் சரியல்ல என்று கூறினார்.

மேலும் அந்த மவ்லவியே உங்களால் ஒரு கிலோ தங்கத்தை கொடுக்க முடியாது. எனவே எனக்கு 20,000 பிரான்க் ஸிஃபாவை கொடுத்து விடுவது சிறந்ததாக இருக்கும். நான் உங்களுக்காக எதையாவது செய்கின்றேன் என்றார். இன்னொரு மவ்லவியோ, இரண்டு வெள்ளை ஆட்டை சதகாவாக கொடுங்கள் என்று கூறினார்.

அதற்குப் பிறகு நமது முபல்லிக் சாஹிப் Chief அவர்களுக்கு அவர் கண்ட கனவிற்கு விளக்கத்தை கூறினார்கள். இரண்டு வெள்ளை விமானங்கள் என்பது இரண்டு வெள்ளை நிற கார்களாகும். அதில் ஒன்று உங்கள் வீடு வரை வரவில்லை. மற்றொன்று உங்களது கிராமம் வரை வந்து சேர்ந்துள்ளது. நானும், அமீர் சாஹிபும் வந்த காரின் நிறம் வெள்ளையாகும். அந்த இடத்திற்கு வருவதற்கு முன்னால் அமீர் சாஹிப் எங்களது இடத்திற்கு வந்தார்கள். பிறகு மீண்டும் அங்கிருந்து திரும்பிச் சென்று விட்டார்கள். பிறகு, ஏணி போட்டு மேலே ஏறுவது என்பது இஸ்லாத்தை அறிந்து கொள்வது மற்றும் அதன் போதனையை தெரிந்து கொள்வதற்கான முயற்சியாகும். அதாவது நீங்கள் காலை மூன்று மணி வரை தப்லீக் நிகழ்ச்சியை கேட்டீர்கள். புத்தகம் விநியோகம் தொடர்பான விஷயத்தை பொருத்தவரை வரக்கூடிய மஸீஹை பற்றி அவர் கருவூலத்தை வாரி வாரி வழங்குவார் என்று கூறப்பட்டுள்ளது. உங்களுக்குப் புத்தகங்கள் கொடுக்கப்பட்டிருக்–கின்றது. இந்த புத்தகங்கள்தான் கருவூலமாகும்.

இந்த விளக்கத்தை கேட்டு Chief சாஹிப் அவர்கள் மிகவும் உற்சாகத்துடன் குதித்தவாறு அப்போதே அஹ்மதி முஸ்லிம் ஆவதாகவும், ஷிர்க்கிலிருந்து தவ்பா செய்வதாகவும் வாக்குறுதி வழங்கினார்கள். இணை வைப்பவர்களுக்கும் அல்லாஹ் நேர்வழிக்கான ஏற்பாடுகளை செய்து விடுகின்றான்.

பிரான்ஸிலுள்ள ஒரு பெண்மணி நாதியா சாஹிபா கூறுகின்றார்கள்: எனது கணவர் முதலிலேயே அஹ்மதி ஆவார். ஆனால் நான் பைஅத் செய்யவில்லை. சில காலங்களுக்கு முன்னால் அஹ்மதிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட வீடியோவை பார்த்தது என்மீது மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. நான் சிந்திப்பதற்கு அது வழிவகுத்தது. நான் ஹுஸூர் அவர்களின் குத்பாவையும் கேட்டு வந்தேன். மெது மெதுவாக இஸ்லாத்தின் உண்மையான போதனைகள் என்மீது தாக்கத்தை ஏற்படுத்த ஆரம்பித்தது. அப்போது நான், இறைவா! நீயே எனக்கு வழிகாட்டுவாயாக என்று துஆ செய்ய ஆரம்பித்து விட்டேன். அப்போது நான் கனவில் கண்டேன். நான் பிரான்ஸிலுள்ள முபாரக் பள்ளிவாயிலில் (அது அங்குள்ள நமது பள்ளிவாயிலாகும்) நூலக அறையில் உட்கார்ந்–திருக்கிறேன். எனது மர்ஹூம் தந்தை வருகின்றார். திருக்குர்ஆனை அன்பளிப்பாக வழங்குகின்றார். திருக்குர்ஆனோடு ஒரு Document –ஐயும் தருகின்றார்.

இந்த கனவிற்குப் பிறகு நான் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டேன். எனது தந்தை எனக்கு கொடுத்த Document என்பது பைஅத் படிவமாகும் என்பது எனக்கு தெரிய வந்தது. எனவே நான் இதன் விளைவாக பைஅத் செய்தேன்.

அல்ஜீரியாவைச் சார்ந்த ரிஸ்வான் சாஹிப் கூறுகின்றார்: அஹ்மதிய்யத்தை பற்றி தெரிந்து கொண்ட பிறகு நான் MTA –விற்காகவே ஆகி விட்டேன். எனது வீட்டிலுள்ளவர்கள் இதிலிருந்து என்னை தடுக்க முயற்சி செய்தனர். ஆரம்பத்தில் எனக்கு போதனை செய்வதாகவே இருந்தது. ஆனால் பிறகு இந்த போதனையானது கட்டாயப்படுத்துதல் என்ற நிலைக்கு உள்ளானது. என்னை இந்த சேனலை விட்டு விலகி இருக்குமாறு கட்டளையிட்டார்கள். நான் இந்த நிலையைக் கண்டு இஸ்திஹாரா செய்தேன். அப்போது நான் ஒரு நாள் கனவில் கண்டேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது ஐந்து கலீஃபாக்களும் எனது வீட்டிற்கு வந்துள்ளார்கள். நான் அவர்களுக்கிடையில் அமர்ந்துள்ளேன். மிகவும் சிறிய கனவாகவே அது இருந்தது. ஆனால் எனக்கு இதில் மிகத் தெளிவான தூதுச் செய்தி இருந்தது. இது தொடர்பாக நான் எனது குடும்பத்தினரிடம் கூறிய போது இதுவொரு சாதாரண கனவாகும். அதிகமாக இந்த ஜமாஅத்தைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருப்பதால் இப்படிப்பட்ட கனவுகள் வருகிறது என்று கூறினர்.

நான் அவர்களது பேச்சைக் கேட்டு விட்டு சிந்துத்து பார்த்தேன். அதாவது நான் ஸைதை அழைத்தால் பக்கர் வருவது சாத்தியமா? அவ்வாறு சாத்தியமில்லை என்றால் நான் இறைவனிடம் வழிகாட்டல் கேட்டு துஆ செய்யும்போது வழிகாட்டியவாறு கனவு வரும்போது அது ஷய்த்தானிடம் இருந்து வருமா?

அவர்கள் கூறுகின்றார்கள்: எவ்வாறிருப்பினும் வீட்டிலுள்ளவர்களது கூற்றுகளில் எனக்கு உறுதி ஏற்படவில்லை. பிறகு 2009 –ல் பைஅத் செய்து விட்டேன்.

நான் சில சம்பவங்களை எடுத்துக் கூறியுள்ளேன். இவ்வாறு பல சம்பவங்கள் உள்ளன. புதிதாக வருபவர்களது ஈமானிலும் நிச்சய உறுதியிலும் அல்லாஹ் முன்னேற்றத்தை வழங்குவானாக. கலப்பற்ற தன்மையிலும், விசுவாசத்திலும் அவர்களை முன்னேறச் செய்வானாக. பழைய அஹ்மதிகளாகிய நம்மையும் கலப்பற்ற தன்மையிலும், விசுவாசத்திலும் முன்னேற்றமடையச் செய்வானாக.

★ ★ ★ ★ ★

## திருக்குர்ஆனிலிருந்து...

**நிச்சயமாக அல்லாஹ் இறையச்சமுடையவர்களுடனும், நன்மை செய்கின்றவர்களுடனும் இருக்கின்றான்.** (16:129)

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

மேலும் எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கின்றான். (29:70)

**அன்ஸருத்தீன்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ, அவர்களுக்குப் [போரிட] அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில், அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. மேலும், நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான். (22:40)

**லஜ்னா இமாயில்லாஹ்**
ஆதம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

(உங்கள்) மார்க்கத் தொடர்பாக உங்களுடன் போர் செய்தவர்களுக்கும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்து, அவர்களிடம் நீதியாக நடப்பதை அல்லாஹ் தடுக்கவில்லை. அல்லாஹ் நீதியாக நடப்பவர்களை நேசிக்கின்றான். (60:9)

**A. பஷீர் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நன்மையும், தீமையும் ஒன்றாகாது. நீர் மிக அழகியவற்றால் (தீமையை) எதிர்ப்பீராக. எவருக்கும் உமக்குமிடையில் பகைமை உள்ளதோ அவர், அதன் விளைவாக உம்முடைய நெருங்கிய நண்பராக ஆகிவிடுவார். (41:35)

**A. சம்சுல் ஆலம்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே, சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்கு கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒரு நபர், இறைவன் ஒருவன் என்றும் அவனுக்கு இணையில்லை என்பதையும் ஏற்றுக் கொண்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் இரட்சிப்பைப் பெற்று விடுவார் என்று எண்ணுகிறார் என்றால் அவரது உள்ளம் தொழுநோயால் பீடிக்கப்பட்டிருக்கின்றது. அவர் குருடராவார். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா**
**ஆதம்பாக்கம்**

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறை வணக்கத்திலும் எந்தவொரு Tax - வரியும் இல்லை. அதிலும் ஓர் இன்பமும் மகிழ்ச்சியும் இருக்கின்றது. அந்த இன்பம் எல்லா இன்பங்களை விடவும் உயர்வானதாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 159-160)

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகையை விடுவதற்காக வேண்டாத காரணங்கள் சொல்வது நஃப்ஸின் பலவீனம் தவிர வேறு எதுவும் இல்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 265; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**மர்ஹூம் A.N.A. ஹாஃபிஸ்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாமல் தவ்ஹீதை ஏற்றுக் கொள்வதால் மட்டும் ஒருவருக்கு ஈடேற்றம் கிடைத்து விடும் என்ற கொள்கையை உடைய மக்கள் மறைமுகமாக முர்த்த(மார்க்கத்தைத் துறந்து சென்றவர்)களாவர். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒருபுறம் முழு உலகமும் நம்மை அழிப்பதற்காக ஒன்று திரண்டது. மறுபுறம் அந்த வல்லமைமிக்க இறைவன் அவர்களின் ஒவ்வொரு தாக்குதல்களிலிருந்தும் என்னைக் காப்பாற்றுகின்றான். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகை (நிறைவேற்றப்படாமல்) மன்னிக்கப்படுவதில்லை. எந்த அளவுக்கு எனில் தூதர்களுக்கு கூட மன்னிக்கப்படவில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 263; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**M.Y. கன்சுல் ஆயிஷா**
சதர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குபடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூய்மையான முழுமையான தவ்ஹீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே கிடைக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இரட்சிப்பின் தலையூற்றாக இருக்கின்ற அந்த முழுமை பெற்ற தவ்ஹீதை அந்த முழுமை பெற்ற நபியைப் பின்பற்றாமல் பெறவே முடியாது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூதரை பின்பற்றாமல் ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டதாக வாதம் செய்பவரிடம் காய்ந்துபோன எலும்புத் துண்டு மட்டுமே இருக்கின்றது. அதில் எந்த சத்தும் இல்லை. அவரது கையில் அணைந்து போன ஒரு தீபம் மட்டுமே இருக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அட்வகேட் சலீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல்களை மனிதன் பார்க்காத வரை ஷய்த்தான் அவனது உள்ளத்திலிருந்து வெளியேற மாட்டான். உண்மையான தவ்ஹீதும் அவனது உள்ளத்தில் நுழைய முடியாது என்ற விஷயமே உண்மையானதாகும். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**ஜலாலுத்தீன்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டிலுள்ள நாத்திகர்களுக்கும் தீய மார்க்கத்தை உடையவர் -களுக்கும் விண்ணின் ஆயிரக்கணக்கான அடையாளங்களைக் காண்பித்து இறைவன் இருக்கின்றான் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி செய்துள்ளார்கள். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

அறிவற்றவர்களே! இறைவனின் இருப்பின் மீது முழுமையான உறுதி ஏற்படாமல் அவனது ஏகத்துவத்தின் மீது எவ்வாறு உறுதி ஏற்பட முடியும்? (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 4-11 January 2018 Issue No. 1-2

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

திறந்தன. அப்போது மியான் அப்துல்லாஹ் சனோரி அவர்கள் பள்ளிவாயிலில் இருந்த அறையில் எனது பாதங்களை அமுக்கிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அவர் முன்னிலையிலேயே மறைவிலிருந்து சிவப்பு மைத்துளிகள் எனது மேலங்கியிலும் அவரது தொப்பியிலும் விழுந்தன. வியப்பிற்குரிய விஷயம் என்னவென்றால், அந்த சிவப்பு மைத்துளிகள் விழுந்த நேரமும், பேனா உதறப்பட்ட நேரமும் ஒன்றாக இருந்தது. ஒரு நொடிப்பொழுது வித்தியாசம் கூட அதில் இருக்கவில்லை. வேறு ஒரு மனிதரால் இந்த இரகசியத்தைப் புரிந்து கொள்ள முடியாது. மேலும் அவர் அதில் சந்தேகம் கொள்வார். ஏனென்றால், அவர் அதனை ஒரு கனவின் விவகாரமாகவே உணர்வார். எவருக்கு ஆன்மீக விஷயங்களைப் பற்றிய அறிவு இருக்குமோ அவர் இதில் சந்தேகம் கொள்ள முடியாது. இவ்வாறே இறைவனால் ஒன்றுமற்றதிலிருந்து ஒன்றை உருவாக்க முடியும். சுருக்கமாக நான் இந்த முழு சம்பவத்தையும் மியான் அப்துல்லாஹ்விடம் கூறினேன். அப்போது எனது கண்களில் கண்ணீர் வந்து கொண்டிருந்தது. இக்காட்சிக்குச் சாட்சியாக இருந்த அப்துல்லாஹ் அவர்கள் மீது இதன் பெரும் தாக்கம் ஏற்பட்டது. அவர் அந்த எனது மேலங்கியை பரக்கத்திற்காக தன்னிடம் வைத்துக் கொண்டார். அது இப்போது வரை அவரிடம் இருக்கின்றது.

**107 வது அடையாளம் :** பலமுறை பூகம்பங்களுக்கு முன்னதாக பல பெரும் பெரும் பூகம்பங்கள் வரும். எதுவரையென்றால், பூமி தலைகீழாக ஆகி விடும் என்று முதலிலேயே பத்திரிகைகளில் என் தரப்பிலிருந்து செய்தி வெளியிடப்பட்டிருக்கின்றது. எனவே, எனது முன்னறிவிப்பிற்கு ஏற்ப சான்ஃபிரான்ஸிஸ்கோ மற்றும் ஃபார்மூஸா போன்ற இடங்களில் வந்த பூகம்பங்கள் எல்லாருக்கும் தெரிந்ததேயாகும். ஆனால், இப்போது **16** ஆகஸ்டு **1906** -ல் அமெரிக்காவின் தென் பகுதியில் அதாவது சிலி மாநிலத்தில் ஒரு கடுமையான பூகம்பம் வந்தது. அது முதலில் வந்த பூகம்பங்களை விட குறைவானது அல்ல. அதனால் **15** சிறிய பெரிய நகரங்களும் ஊர்களும் அழிந்து விட்டன. மேலும், ஆயிரக்கணக்கான உயிர்கள் பறிபோயின. மேலும், **10** இலட்சம் பேர் இதுவரை ஆதரவற்ற நிலைமையில் இருக்கின்றனர். இது எவ்வாறு அடையாளமாக ஆக முடியும்? இந்த பூகம்பங்கள் பஞ்சாபில் வரவில்லையே என்று ஒருவேளை அறிவற்ற மக்கள் கூறலாம். ஆனால், இறைவன் முழு உலகிற்கும் இறைவனாவான். அவன் பஞ்சாபிற்கு மட்டும் உரியவன் அல்ல. மேலும், அவன் முழு உலகிற்கும் இந்த செய்திகளைத் தந்துள்ளான். பஞ்சாபிற்கு மட்டும் இதை தரவில்லை. இறைவனின் முன்னறிவிப்புகளை எவ்வித உரிமையுமின்றி தட்டிக்கழிப்பதும் இறைவனது வார்த்தைகளை கவனமாக படிக்காமல் இருப்பதும் எப்படியாவது உண்மை மறைக்கப்பட்டு விட வேண்டும் என்பதற்காக முயற்சி செய்து கொண்டிருப்பதும் துர்பாக்கியம் ஆகும். ஆனால், அவ்வாறு பொய்ப்படுத்துவதன் மூலமாக உண்மையை மறைக்க முடியாது.

இறைவன் எனக்கு பொதுவாக பூகம்பங்களைப் பற்றி தெரிவித்துள்ளான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். எனவே முன்னறிவிப்பிற்கு ஏற்ப எவ்வாறு அமெரிக்காவில் பூகம்பங்கள் வந்தனவோ அவ்வாறே ஐரோப்பாவிலும் வந்தன. மேலும், ஆசியாவின் பல இடங்களிலும் அவை வரும். அவற்றில் சில கியாமத்தின் முன்மாதிரியாக இருக்கும். எந்த அளவு மரணங்கள் நிகழுமென்றால் இரத்த ஆறுகள் ஓடும். இந்த மரணத்திலிருந்து விலங்குகளும் பறவைகளும் கூட வெளியில் இருக்காது. பூமியில் எந்த அளவு கடுமையான அழிவு ஏற்படுமென்றால் மனிதன் பிறந்த அந்த நாளிலிருந்து அதுபோன்ற அழிவு ஒருபோதும் வந்திருக்காது. பெரும்பாலான இடங்கள் தலைகீழாக ஆகி விடும். அவற்றில் ஒருபோதும் குடியிருப்புகள் இல்லாதது போன்று இருக்கும். அத்துடன் இன்றும் பல பேரழிவுகள் பூமியிலும் வானத்திலிருந்தும் பயங்கரமான வடிவத்தில் உருவாகும். எதுவரையென்றால் அறிவுள்ள ஒவ்வொருவரது பார்வையிலும் அந்த விஷயங்கள் வழக்கத்திற்கு மாற்றமானதாக ஆகி விடும். மேலும் விஞ்ஞானம் மற்றும் தத்துவத்தின் நூல்களின் எந்த பக்கத்திலும் அது பற்றிய விபரங்கள் கிடைக்காது. அப்போது இது என்ன நடக்க போகின்றது? என்று நிம்மதியின்மை உருவாகும். மேலும் பலரும் இரட்சிப்பைப் பெறுவர். பலரும் அழிந்து விடுவர். அந்த நாட்கள் அருகில் இருக்கின்றன. இன்னும் சொல்வதென்றால் அவை வாசலில் இருப்பதை நான் பார்க்கின்றேன். அதாவது, உலகம் ஒரு கியாமத்தின் காட்சியைப் பார்க்கும். பூகம்பங்கள் மட்டும் அல்லாமல் வேறு பல அச்சுறுத்தும் பேரழிவுகளும் வெளிப்படும். அவற்றில் சில அழிவுகள் வானத்திலிருந்தும் சில அழிவுகள் பூமியிலிருந்தும் வெளிப்படும். இது ஏன் என்றால் மனிதயினம் தன்னை படைத்த இறைவனை வணங்குவதை கை விட்டு விட்டது. மேலும் முழுமையான உள்ளத்துடனும் முழுமையான தைரியத்துடனும் முழுமையான எண்ணங்களுடனும் அவர்கள் உலகின் பக்கமே சாய்ந்து விட்டனர். நான் வராமலிருந்திருந்தால் இந்த துன்பங்கள் வருவதில் கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டிருக்கும். ஆனால் எனது வருகையுடன் ஒரு நீண்ட காலமாக மறைவாக இருந்த இறைவனின் கோபத்தைக் காட்டுகின்ற அந்த மறைவான நாட்டங்கள் வெளிப்பட்டு விட்டன. இதைப் பற்றி இறைவன் وَمَا كُنَّا مُعَذِّبِيْنَ حَتّٰى نَبْعَثَ رَسُوْلًا - நாம் ஒரு தூதரை அனுப்பாத வரை ஒருபோதும் தண்டனையை அனுப்புவதில்லை **(17:16)** என்று கூறுகின்றான்.

பாவமன்னிப்பை தேடுபவர்கள் பாதுகாப்பைப் பெறுவர். மேலும், எவர் துன்பம் வருவதற்கு முன்னதாக அஞ்சுகின்றனரோ அவர்கள் மீது கருணை காட்டப்படும். நீங்கள் இந்த பூகம்பங்களிலிருந்து பாதுகாப்பாக இருப்பீர்கள் என்று எண்ணுகின்றீர்களா என்ன? நீங்கள் உங்களது திட்டங்கள் மூலமாக சுயமே உங்களை பாதுகாத்துக் கொள்ள முடியுமா என்ன? ஒருபோதும் முடியாது. அந்த நாளில் மனித பணிகள் முடிந்து போகும். அமெரிக்கா போன்ற இடங்களில் கடுமையான பூகம்பங்கள் வந்தன. மேலும் உங்களது நாடு அவற்றிலிருந்து பாதுகாக்கப்பட்டதாக இருக்கின்றது என்று கருதாதீர்கள். ஒருவேளை அவர்களை விட அதிகமாக துன்பத்தின் முகத்தை நீங்கள் பார்ப்பீர்கள் என்பதை நான் பார்க்கின்றேன்.

ஐரோப்பாவே! நீயும் பாதுகாப்பில் இல்லை. மேலும் ஆசியாவே! நீயும் பாதுகாப்பில் இல்லை. தீவுகளில் வாழ்பவர்களே! எந்தவொரு செயற்கை இறைவனும் உங்களுக்கு உதவி செய்ய மாட்டான். நான் நகரங்கள் வீழ்வதைக் காண்கிறேன். மேலும் குடியிருப்புகள் நாசமாகி விட்டதைக் காண்கிறேன். அந்த ஏக இறைவன் ஒரு காலம் வரை மவுனமாக இருந்தான். அவனது கண்களுக்கு முன்னால் வெறுக்கத்தக்க செயல்கள் செய்யப்பட்டன. அவன் அமைதியாக இருந்தான். ஆனால் இப்போது அவன் அச்சுறுத்தலுடன் தனது முகத்தைக் காட்டுவான். அந்தக் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதை கேட்கக்கூடிய காதுகள் கேட்டுக் கொள்ளட்டும். இறைவனின் பாதுகாப்பின் கீழ் அனைவரையும் கொண்டு வர வேண்டும் என நான் முயற்சி செய்தேன். ஆனால் இறை நியதியில் எழுதப்பட்டது நிறைவேறுவது அவசியமானதாக இருந்தது. இந்த (இந்திய) நாட்டிற்கான முறையும் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது என நான் உண்மையாகவே கூறுகிறேன். நூஹின் காலம் உங்கள் கண்களுக்கு முன்னால் வந்து விடும். மேலும் லூத்தின் நாட்டில் நடந்த சம்பவத்தை உங்கள் கண்களாலேயே கண்டு கொள்வீர்கள். ஆனால், இறைவன் கோபத்தை காட்டுவதில் நிதானமானவனாக இருக்கிறான். உங்கள் மீது கருணை காட்டப்படும் பொருட்டு நீங்கள் பாவமன்னிப்புத் தேடுங்கள். எவர் இறைவனை விட்டு விடுன்றாரோ அவர் ஒரு கிருமியாவார்; மனிதர் அல்ல. யார் அவனுக்கு அஞ்சுவதில்லையோ அவர் மரணித்தவராவார்; உயிருடன் இருப்பவர் அல்ல.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 265)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad